- சூழல் படத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசித்தல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 57, 58

பாடம் 3

# சொல்லின் களஞ்சியம்

## சொற்களை உருவாக்குக.

சாயம்
ஓவியம்
ஔவியம்
இரயில்

ய வி வை யா ர் ர யி ல்

இரவு
வேலி
தாள்
வெளிச்சம்

ர வு வே ள் வெ

குழல்
விழி
கிழக்கு
பூலோகம்

ழ ழி லோ



தூளி
நிலம்
கேள்வி
மேளம்

ளி ல ள் வி ள

சுலபம்
வலம்
உள்ளம்
எழுத்து

ல ள ள் ழு



தேள்
விகாரம்
கிழமை
எலும்பு

ள் வி ர ழ லு






**அகப்பக்கம்**

www.wikihow.com/Learn-Tamil-Alphabets

3.3.8 - இடையின உயிர்மெய் எழுத்தைக் கொண்ட சொற்களை உருவாக்கி எழுதுவர்.

3.3.6 - வல்லின உயிர்மெய் எழுத்தைக் கொண்ட சொற்களை உருவாக்கி எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- பாடப் பகுதியில் உள்ள இடையின உயிர்மெய் எழுத்துச் சொற்களை வாசித்தல்.
- பாடப் பகுதியில் உள்ள வல்லின உயிர்மெய் எழுத்துச் சொற்களை வாசித்தல்.
- சரியான எழுத்துகளை எழுதிச் சரியான சொல்லாக்கப் பயிற்சிகளை அளித்தல்.
- இடையின வல்லின உயிர்மெய் எழுத்துகளைக் கொண்டு வேறு சில சொற்களை உருவாக்கி எழுதுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 59

பாடம் 4

# செய்யுளும் மொழியணியும்

## மரபுத்தொடரையும் பொருளையும் அறிக.

1


2



3


4


### மரபுத்தொடரும் பொருளும்

- **ஒற்றைக் காலில் நிற்றல்.**
  விடாப்பிடியாக நிற்றல் / பிடிவாதமாக இருத்தல்

4.6.1 - ஒன்றாம் ஆண்டுக்கான மரபுத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து கூறுவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- பாடப் பகுதியில் உள்ள சூழல் படங்களைப் பற்றி உரையாடுதல்.
- சூழலுக்கு ஏற்ற மரபுத்தொடரைத் தொடர்புப்படுத்தி உரையாடுதல்.
- மரபுத்தொடரையும் அதன் பொருளையும் அழகான கையெழுத்தில் எழுதுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 60

பாடம் 5
# இலக்கணம்

## சரியாகப் பயன்படுத்துக.




5.1.5 - இடையின மெய்யெழுத்துகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- பாடப் பகுதியில் உள்ள சொற்களை வாசிக்கச் செய்தல்.
- இடையின மெய்யெழுத்துகளைச் சரியாக உச்சரித்தல்.
- சொற்களைச் சொல்வதெழுதுதலாக எழுதுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 61

தொகுதி 10

பாடம் 1

# மொழி விளையாட்டு

**சரியான எழுத்துகளைப் பயன்படுத்திக் கூறுக.**

நூ, நி, ணி, நெ, மௌ, நே, ஞா, ணு, மோ

- ஞானியின் கதை
- நெய் பலகாரம்
- பள்ளியில் பணிபுரிகிறார்
- நிலா ஒளி
- நூல் கண்டு
- மனித நேயம்
- மௌனமாக இருந்தார்
- சுத்தம் பேணுவோம்
- மோதி விழுந்தான்

ர, ழி, வி, யா, ளு, ரி, ழை, ள், ழு, வா, லூ

- பாலூட்டி வளர்த்தார்
- அருகில் சென்றோம்
- மொழி விளையாட்டு
- வானிலை அறிவிப்பு
- கொய்யா மரம்
- அழகான எழுத்து
- பளு தூக்கினான்
- மரியாதைச் சொற்கள்
- கனத்த மழை



1.2.4 - மெல்லின உயிர்மெய் எழுத்துகளை ஒலிப்பர்.
1.2.5 - இடையின உயிர்மெய் எழுத்துகளை ஒலிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**
- பாடப் பகுதியில் உள்ள மெல்லின உயிர்மெய் எழுத்துகளைச் சரியாக ஒலித்தல்.
- இடையின உயிர்மெய் எழுத்துகளைச் சரியாக ஒலித்தல்.
- மாணவர்கள் குழு முறையில் சொற்களை எழுதிப் பல வடிவங்களில் அட்டைகள் தயாரித்தல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 62,63

பாடம் 2

# இரட்டிப்பு எழுத்து

## வாசித்து அறிக.




1. குளத்தில் **வண்ண** மீன்கள் நீந்தின.
2. **அண்ண**ன் பரிசு தந்தார்.
3. இடி இடித்து **மின்ன**ல் மின்னியது.
4. அம்மா **முள்ள**ங்கி வாங்கினார்.
5. அத்தை **சல்ல**டையில் மாவு சலித்தார்.
6. **சின்ன**ம்மா சிரித்துப் பேசினார்.



2.2.10 - ண்ண, ன்ன, ல்ல, ள்ள ஆகிய இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- பாடப் பகுதியில் உள்ள இரட்டிப்பு எழுத்துகள் கொண்ட சொற்களை விளக்குதல்.
- சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசித்தல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 64

பாடம் 3

# இரட்டிப்புச் சொற்கள்

## வாசித்து எழுதுக.



1. சத்துள்ள உணவை உ**ண்ண** வேண்டும்.
2. கூடையில் பழங்கள் உ**ள்ள**ன.
3. தம்பி மெ**ல்ல**ப் பேசினான்.
4. தாத்தா சொ**ன்ன** கதை புரிந்தது.
5. ப**ள்ள**த்தில் நீர் தேங்கியது.
6. வரிசையில் செ**ல்ல** வேண்டும்
7. மாமா ச**ன்ன**ல் ஓரம் நின்றார்.
8. க**ண்ண**ன் மரத்தடியில் அமர்ந்தான்.
9. சட்டையில் பள்ளிச் சி**ன்ன**ம் இருந்தது.
10. வாசித்த பி**ன்ன**ர் எழுதினர்.
11. குளத்தில் அ**ன்ன**ம் நீந்தியது.
12. அப்பா மாலையில் இ**ல்ல**ம் திரும்பினார்.









3.3.13 - ண்ண, ன்ன, ல்ல, ள்ள ஆகிய இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்களை உருவாக்கி எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- பாடப் பகுதியில் உள்ள இரட்டிப்புச் சொற்களை வாசிக்கச் செய்தல்.
- இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்டு ஏற்ற சொற்களை உருவாக்கி எழுதுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 65

பாடம் 4

# செய்யுளும் மொழியணியும்

## கொன்றை வேந்தனையும் பொருளையும் அறிக.









### கொன்றை வேந்தனும் பொருளும்

- **ஆலயம் தொழுவது சாலவும் நன்று.**
  கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபடுவது மிக்க நன்மை தரும்.

4.2.1 - ஒன்றாம் ஆண்டுக்கான கொன்றை வேந்தனையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- பாடப் பகுதியில் உள்ள படச் சூழல்களை விளக்குதல்.
- கொன்றை வேந்தனையும் பொருளையும் விளக்கி உரையாடுதல்.
- கொன்றை வேந்தனையும் பொருளையும் அழகான கையெழுத்தில் எழுதச் செய்தல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 66

பாடம் 5

# இலக்கணம்

## உயர்திணை, அஃறிணை அறிக.



| உயர்திணை | அஃறிணை |
|---|---|
| அக்காள் | மரம் |
| மருத்துவர் | செடி |
| அதிகாரி | ஆடு |
| கலையரசி | மாடு |
| ஆசிரியர்கள் | மிதிவண்டி |
| மன்னர் | முயல் |
| குழந்தைகள் | கரடி |
| தொழிலாளர் | புத்தகம் |
| நண்பன் | காலணி |
| உறவினர் | மகிழுந்து |
| திருமதி மேரி | பேருந்து |
| தோழி | பள்ளிக்கூடம் |
| திருவாளர் சோங் | கடை |
| பெற்றோர் | வீடு |
| குமாரி கமலா | விலங்குகள் |

உயர்திணை: மனிதர், தேவர் போன்ற பகுத்தறிவு உள்ளவர்களைக் குறிப்பது.

அஃறிணை: உயர்திணை அல்லாத பிற உயிரினங்களையும் உயிரற்ற பொருள்களையும் குறிப்பது.

5.3.1 - உயர்திணை, அஃறிணை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- உயர்திணை, அஃறிணை பற்றிய விளக்கங்களை அளித்தல்.
- மாணவர்கள் சுயமாக உயர்திணை, அஃறிணைப் பட்டியல் ஒன்றனைத் தயார் செய்தல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 67



# தொகுதி 11

## பாடம் 1 ஒலித்து மகிழ்வோம்

### சொற்களைக் கண்டறிக.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞா | யி | று | அ | நீ | தி | அ | மி | ல | ம் |
| அ | மோ | க | ம் | அ | ர | ணை | ள | அ | அ |
| இ | ரு | ம | ல் | இ | ழி | வு | கா | ரு | லு |
| ங் | ப | க | டை | ண் | ரு | உ | ய் | ம் | வ |
| ங | உ | ண் | ஒ | எ | உ | ட | த | பு | ல் |
| ன | ழை | ணா | ழு | தி | ளி | னே | அ | ழு | கை |
| ம் | ப் | டி | ங் | றொ | மை | மை | ன் | பு | தி |
| இ | பு | ம | கு | ளி | ரி | ள | னா | ப் | ம |
| ரு | தி | னு | ட | க | உ | இ | சி | னு | னு |
| ள் | இ | டை | வே | ளை | ள் | யு | ஆ | அ | அ |

1.2.4 - மெல்லின உயிர்மெய் எழுத்துகளை ஒலிப்பர்.
1.2.5 - இடையின உயிர்மெய் எழுத்துகளை ஒலிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- மெல்லின உயிர்மெய் எழுத்துகள், இடையின உயிர்மெய் எழுத்துகள் ஆகியவற்றை ஒலித்தல்.
- மெல்லின உயிர்மெய் எழுத்துச் சொற்களையும் இடையின உயிர்மெய் எழுத்துச் சொற்களையும் சொற்கட்டத்திலிருந்து கண்டறிந்து ஒலித்தல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 68,69

பாடம் 2

# இனவெழுத்துகள்

## வாசித்து அறிக.



1. தெ**ன்ற**ல் காற்று வீசியது.
2. மரத்தடியில் இருவர் நி**ன்ற**னர்.
3. சிறுவர்கள் மிட்டாயை மெ**ன்ற**னர்.
4. தம்பி வெ**ன்ற** பரிசைப் பார்த்தேன்.





1. அம்மாவின் பெயர் ச**ங்க**ரி.
2. மரத்தில் மா**ங்க**னிகள் தொ**ங்க**க் கண்டேன்.
3. அத்தை அறையில் உற**ங்க** நினைத்தார்.
4. மாணவர்கள் அர**ங்க**த்தில் அமர்ந்தனர்.






1. இளைஞன் ப**ம்ப**ரம் வாங்கினான்.
2. மா**ம்ப**ழம் இனிப்பாக இருந்தது.
3. அப்பா ர**ம்ப**ம் ஒன்றை வாங்கினார்.
4. தாத்தாவின் புல**ம்ப**ல் கேட்டு வருந்தினேன்.



2.2.11 - ங்க, ஞ்ச, ண்ட, ந்த, ம்ப, ன்ற ஆகிய இனவெழுத்துச் சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- இனவெழுத்துச் சொற்களை மாணவர்களுக்கு விளக்குதல்.
- பாடப் பகுதியில் உள்ள வாக்கியங்களைச் சரியான உச்சரிப்புடன் வாசித்தல்.
- வாக்கியங்களில் உள்ள இனவெழுத்துச் சொற்களைப் பட்டியலிட்டுச் சரியான உச்சரிப்புடன் வாசித்தல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 70

## பாடலைப் பாடி மகிழ்க.

குகையில் மனிதன் த**ஞ்ச**ம்
கோடையில் தண்ணீர் ப**ஞ்ச**ம்
கோமகள் சடையில் கு**ஞ்ச**ம்
கூடத்தில் உறங்க ம**ஞ்ச**ம்

தங்கை வாங்கினாள் ப**ண்ட**ம்
தவறு செய்தால் த**ண்ட**ம்
கரும்பு வெட்டினால் து**ண்ட**ம்
கிழக்கில் ஆசியா க**ண்ட**ம்

பாடலின் இனிமை ச**ந்த**ம்
பூக்களின் காலம் வச**ந்த**ம்
புத்தகமே நமக்குச் சொ**ந்த**ம்
பொன்னே யானையின் த**ந்த**ம்





2.2.11 - ங்க, ஞ்ச, ண்ட, ந்த, ம்ப, ன்ற ஆகிய இனவெழுத்துச் சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- பாடப் பகுதியில் உள்ள பாடலை நயமுடன் வாசித்தல்.
- பாடலில் உள்ள இனவெழுத்துச் சொற்களைச் சரியாக வாசித்தல்.
- பாடலைக் குழு முறையில் வாசித்துக் காட்டுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 70

பாடம் 3

# கொஞ்சம் கேளுங்கள்

## சொற்களை உருவாக்குக.



**ங்க**

- தங்கிச் சென்றான்
- நாங்கள் சென்றோம்
- தங்கம் வாங்கினோம்
- துலங்க வேண்டும்

**ஞ்ச**

- மஞ்சள் நிறம்
- பஞ்சம் வந்தது
- கொஞ்சி மகிழ்ந்தாள்
- பஞ்சு மிட்டாய்

**ண்ட**

- பெரிய மண்டபம்
- வறண்ட நிலம்
- ஆண்டு வந்தான்
- நீண்ட கவிதை

**ந்த**

- அந்தி மாலை
- மந்தமாக இருந்தது
- விளைந்த இடம்
- உயர்ந்த மனிதர்
- ஆந்தை அலறும்

**ம்ப**

- குடும்ப விழா
- பாம்பு சீறியது
- சிதம்பர ரகசியம்
- செம்படவன் வந்தான்

**ன்ற**

- ஈன்ற தாய்
- முயன்ற சிறுவன்
- வென்று வந்தான்
- கழன்ற கம்மல்

3.3.14 - ங்க, ஞ்ச, ண்ட, ந்த, ம்ப, ன்ற ஆகிய இனவெழுத்துச் சொற்களை உருவாக்கி எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- பாடப் பகுதியில் உள்ள இனவெழுத்துச் சொற்களை வாசித்தல்.
- சொற்றொடர்களைப் பிழையற வாசித்தல்.
- இனவெழுத்துச் சொற்களுக்கு ஏற்ற சொற்றொடர்களை உருவாக்கி எழுதச் செய்தல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 71

பாடம் 4

# செய்யுளும் மொழியணியும்

## கொன்றை வேந்தனையும் பொருளையும் அறிக.



- வளர்மதி முதலாம் ஆண்டு மாணவி.
- வளர்மதி பாடங்களில் கவனம் செலுத்துவாள்.



- வீட்டில் பாடங்களை மீள்பார்வை செய்வாள்.
- தெரியாத பாடங்களை ஆசிரியரிடம் கேட்பாள்.
- முயற்சியுடன் படித்தாள்.




- எல்லாப் பாடங்களிலும் சிறப்பாகத் தேறினாள்.
- வளர்மதி பரிசு பெற்றாள்.
- அனைவரும் வளர்மதியைப் பாராட்டினர்.

### கொன்றை வேந்தனும் பொருளும்

- **ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு.**
  விடாமுயற்சியோடு செயல்படுவது வாழ்க்கையை வளப்படுத்தும்.

4.2.1 - ஒன்றாம் ஆண்டுக்கான கொன்றை வேந்தனையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- பாடப் பகுதியைப் பிழையற வாசித்தல்.
- கொன்றை வேந்தனையும் பொருளையும் விளக்குதல்.
- கொன்றை வேந்தனையும் பொருளையும் எழுதுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 72

பாடம் 5
# இலக்கணம்

## நிறுத்தக்குறிகளை அறிக.

### நிறுத்தக்குறிகள்

| முற்றுப்புள்ளி . | வினாக்குறி ? |
|---|---|
| செய்தி வாக்கியம் | வினா வாக்கியம் |
| நேற்று மழை பெய்தது. | உன் பெயர் என்ன? |
| தம்பி படம் வரைந்தான். | அவர் ஏன் அழைத்தார்? |
| ஆசிரியர் பாடம் போதிக்கிறார். | பெரியவர் எங்கு வசிக்கிறார்? |
| மாலினி நடனம் ஆடுவாள். | தங்கை எப்படி வருவாள்? |
| காவியன் கதை சொன்னான். | உன் மகிழி என்ன? |
| தாத்தா பழம் சாப்பிட்டார். | பொம்மையை வாங்கியவர் யார்? |

5.5.1 - முற்றுப்புள்ளி, வினாக்குறி அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- நிறுத்தக்குறிகள் பற்றி விளக்குதல்.
- பாடப் பகுதியில் உள்ள வாக்கியங்களை நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்தல்.
- நிறுத்தக்குறிகளுக்கு ஏற்ற வாக்கியங்களைக் கூறச் செய்தல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 73

# தொகுதி 12

## பாடம் 1 எழுத்தும் ஒலியும்

### எழுத்துகளை ஒலித்திடுக.



க்

| | | |
|---|---|---|
| க | கா | கி |
| கீ | கு | கூ |
| கெ | கே | கை |
| கொ | கோ | கௌ |

ச்

| | | |
|---|---|---|
| ச | சா | சி |
| சீ | சு | சூ |
| செ | சே | சை |
| சொ | சோ | சௌ |

ட்

| | | |
|---|---|---|
| ட | டா | டி |
| டீ | டு | டூ |
| டெ | டே | டை |
| டொ | டோ | டௌ |

த்

| | | |
|---|---|---|
| த | தா | தி |
| தீ | து | தூ |
| தெ | தே | தை |
| தொ | தோ | தௌ |

ப்

| | | |
|---|---|---|
| ப | பா | பி |
| பீ | பு | பூ |
| பெ | பே | பை |
| பொ | போ | பௌ |

ற்

| | | |
|---|---|---|
| ற | றா | றி |
| றீ | று | றூ |
| றெ | றே | றை |
| றொ | றோ | றௌ |

1.2.3 - வல்லின உயிர்மெய் எழுத்துகளை ஒலிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வல்லின உயிர்மெய் எழுத்துகளை விளக்குதல்.
- பாடப் பகுதியில் உள்ள வல்லின உயிர்மெய் எழுத்துகளைச் சரியாக ஒலித்தல்.
- வல்லின உயிர்மெய் எழுத்துகளைக் கொண்டு மாணவர்கள் சொற்களை உருவாக்கி ஒலித்தல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 74

பாடம் 2

# அக்கரை இக்கரை

## வாசித்து அறிக.




2.2.9 - க்க, ச்ச, ட்ட, த்த, ப்ப, ற்ற ஆகிய இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- இரட்டிப்பு எழுத்துச் சொற்களைப் பிழையற வாசித்தல்.
- இரட்டிப்பு எழுத்துச் சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசித்தல்.
- இரட்டிப்பு எழுத்துச் சொற்களைச் சொல்வதெழுதுதலாக எழுதச் செய்தல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 75

பாடம் 3

# அக்கம் பக்கம்

## வாசித்து எழுதுக.



1. மாணவர்கள் அக்கம் பக்கம் பார்த்துச் சாலையைக் கடந்தனர்.
2. சிறுமியின் கால் வீக்கம் கண்டது.
3. குழந்தை தாயின் மீது ஏக்கம் கொண்டது.
4. அப்பா அணிச்சல் வாங்கி வந்தார்.
5. தங்கைக்குக் காய்ச்சல் கண்டது.
6. அண்ணன் துணிச்சல் மிக்க ஓர் இளைஞன்.
7. தாத்தா காய்கறித் தோட்டம் போட்டார்.
8. கமலா காகிதத்தில் கட்டம் வரைந்தாள்.
9. அதிகாரி பள்ளியை நோட்டம் இட்டார்.
10. ஆசிரியர் திருத்தம் செய்யச் சொன்னார்.
11. அந்த உடை சிறுமிக்குப் பொருத்தமாக இருந்தது.
12. தினமும் வாசித்தல் நம் மொழியை வளப்படுத்தும்.
13. நாய் உணவை மோப்பம் பிடித்தது.
14. உரையாடலை வானொலியில் ஒலிப்பதிவு செய்தனர்.
15. குழந்தைக் காப்பகத்தில் தம்பியை விட்டனர்.
16. சிற்றப்பா வெளிநாடு சென்றார்.
17. வகுப்பறையில் கற்றல் கற்பித்தல் மகிழ்ச்சியாக நடந்தது.
18. முகுந்தன் சிறப்பாக ஓவியம் வரையும் ஆற்றல் கொண்டவன்.





3.3.12 - க்க, ச்ச, ட்ட, த்த, ப்ப, ற்ற ஆகிய இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்களை உருவாக்கி எழுதுவர்

**ஆசிரியர் குறிப்பு**

- பாடப் பகுதியில் உள்ள வாக்கியங்களை வாசித்தல்.
- வாக்கியங்களில் உள்ள இரட்டிப்பு எழுத்துச் சொற்களை வாசித்தல்.
- இரட்டிப்பு எழுத்துச் சொற்களை மாணவர்கள் சுயமாக உருவாக்கி எழுதுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 76,77

பாடம் 4

# செய்யுளும் மொழியணியும்

## பழமொழியையும் பொருளையும் அறிக.




### பழமொழியும் பொருளும்

- **இளங்கன்று பயம் அறியாது.**

  இளவயதினர் எதைப்பற்றியும் கவலைப்படாமல் ஒரு செயலில் துணிந்து இறங்கி விடுவர்.

4.7.1 - ஒன்றாம் ஆண்டுக்கான பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து கூறுவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- பாடப் பகுதியில் உள்ள சூழல் படங்களை விளக்குதல்.
- பழமொழியையும் அதன் பொருளையும் விளக்குதல்.
- மேலும் சில கதை அல்லது சூழலை மாணவர்கள் உருவாக்கிக் கூறுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 78

பாடம் 5

# இலக்கணம்

## செய்தி வாக்கியங்களை அறிக.

**வாக்கிய வகைகள்**

- வாக்கியங்களைக் கருத்து, அமைப்பு என்னும் அடிப்படையில் பிரிக்கலாம்.

- **செய்தி வாக்கியம்** - தகவலை வெளிப்படுத்துதல்.




**எடுத்துக்காட்டு:-**

1. கனிமொழி கட்டுரை எழுதினாள்.
2. அப்பா மடிக்கணினி வாங்கினார்.
3. நண்பர்கள் திடலில் விளையாடுகின்றனர்.
4. கிராமத்தில் வெள்ளம் ஏற்பட்டது.
5. மாணவர்கள் வரிசையாகச் சென்றனர்.
6. தாத்தா மெதுவாக நடந்தார்.
7. காய்கறிகளையும் பழங்களையும் உண்ண வேண்டும்.
8. சிறுவர்கள் பட்டம் விடுகின்றனர்.
9. சாலையில் வாகனங்கள் மெதுவாகச் சென்றன.
10. அக்காள் இரவுச் சந்தைக்குச் செல்கிறாள்.
11. கமலன் மேடையில் பாடினான்.
12. நாம் அனைவரும் இயற்கையை நேசிக்க வேண்டும்.
13. மாணவர்கள் சேமிக்கும் பழக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.





5.4.3 - செய்தி வாக்கியத்தை அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- செய்தி வாக்கியங்கள் பற்றி விளக்குதல்.
- பாடப் பகுதியில் உள்ள வாக்கியங்களைப் பிழையற வாசிக்கச் செய்தல்.
- செய்தி வாக்கியங்களை மாணவர்கள் பிழையற எழுதுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 79




# வல்லின மாலை

## எழுத்துகளைச் சரியாக ஒலித்திடுக.

கடல், கிளை, குடம், கெண்டை, கைப்பை, கோடு

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |

காடு, கீற்று, கூடு, கேடு, கொடு, கௌரவம்

சந்தம், சிக்கனம், சுவடு, செலவு, சைகை, சோகம்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |

சாட்டை, சீற்றம், சூடம், சேலை, சொத்து, சௌக்கியம்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |

1.2.3 - வல்லின உயிர்மெய் எழுத்துகளை ஒலிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வல்லின உயிர்மெய் எழுத்துகளைச் சரியாக ஒலித்தல்.
- வல்லின உயிர்மெய் எழுத்துகள் அடங்கிய சொற்களைச் சரியாக ஒலித்தல்.
- வல்லின உயிர்மெய் எழுத்துச் சொற்களை மாணவர்கள் குழு முறையில் எழுதி ஒலித்தல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 80

| | | | |
|---|---|---|---|
| தடம் | தகுதி | பயணம் | மறதி |
| தடாகம் | தாக்கம் | பாவனை | இறால் |
| கடினம் | தியானம் | பிடிவாதம் | மறியல் |
| திடீரென | தீவிரம் | பீடிகை | மறுப்பு |
| கொடுமை | துடுப்பு | புகை | மறைவிடம் |
| கொடூரம் | தூபம் | பூச்செண்டு | மற்றொரு |
| சட்டென | தெளிவு | பெருங்காயம் | பிறை |
| கேட்டேன் | தேக்கு | பேராசை | பிளிறு |
| கொடை | தைலம் | பையன் | மறை |
| விட்டொழி | தொகுப்பு | பொம்மை | மறுகு |
| ஓடோடி | தோட்டம் | போர்த்து | மறைவு |

## மெய்யைக் கற்போம்



கசட தபற வல்லினமாம்
ஙஞண நமன மெல்லினமாம்
யரல வழள இடையினமாம்
நாம் அனைவரும் மூவினமாம்!

வல்லினம் கற்றால் வீரம் பேசலாம்
மெல்லினம் கற்றால் மெதுவாய்ப் பேசலாம்
இடையினம் கற்றால் எளிதில் பேசலாம்
இளமையில் கற்றால் இனிதே பேசலாம்!

## உயர்நிலைச் சிந்தனை

வல்லின உயிர்மெய் எழுத்துகளையும் சொற்களையும் பொருத்தமான வரிபடம் மூலம் எழுதி வாசித்திடுக.

I.2.3 - வல்லின உயிர்மெய் எழுத்துகளை ஒலிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**
- வல்லின உயிர்மெய் எழுத்துகளைச் சரியாக ஒலித்தல்.
- வல்லின உயிர்மெய் எழுத்துகள் அடங்கிய சொற்களைச் சரியாக ஒலித்தல்.
- வல்லின உயிர்மெய் எழுத்துச் சொற்களை மாணவர்கள் குழு முறையில் எழுதி ஒலித்தல்.

பாடம் 2

# நூலகமும் ஆலயமும்

## வாசித்து அறிக.

பள்ளிக்கூடம் சென்றிடலாம்
பாடம் எல்லாம் கற்றிடலாம்
அள்ளி மதிப்பெண் பெற்றிடலாம்
அறிவில் சிறந்து விளங்கிடலாம்!

வகுப்பில் பாடம் படித்தாலும்
வாழ்வில் மேலும் முன்னேற
தகுந்த நூல்கள் நிறைந்திட்ட
தமிழ் நூலகத்தை நாடிடுவோம்!








கதைகள், பாடல், காவியங்கள்
கருத்து நிறைந்த பல நூல்கள்,
எல்லாம் எடுத்துப் படித்திட்டால்
இமயமலை போல் அறிவுயரும்!

அறிவைப் பெருக்கும் நூல்களையே
ஆர்வத்தோடு நாள்தோறும்
சிறிய வயதில் வாசித்தால்
சிந்தை சிறக்க வாழ்ந்திடலாம்!

நூலகங்கள் ஆலயங்கள்
நூல்கள் யாவும் இறைவடிவம்!
பாலகர்கள் நாமெல்லாம்
பயனை உணர்ந்து உயர்ந்திடுவோம்!

- குழந்தைப் பாடல்கள்

2.2.3 - வல்லின உயிர்மெய் எழுத்தைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- கவிதையில் உள்ள வல்லின உயிர்மெய் எழுத்துச் சொற்களை அடையாளங்கண்டு சரியான உச்சரிப்புடன் வாசித்தல்.
- கவிதையை ஆசிரியர் விளக்குதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 81

பாடம் 3

# வாக்கியங்களில் வல்லினம்

## வாசித்து எழுதுக.



1. கடைக்குச் சென்றாள்.
2. காகம் கரைந்தது.
3. சூரியன் கிழக்குத் திசையில் உதிக்கும்.
4. பறவைகள் இரை தேடிச் சென்றன.
5. கொக்கு குளக்கரையில் நின்று கொண்டிருந்தது.
6. தம்பி துள்ளி ஓடிப் பந்தை எடுத்தான்.



7. அம்மா அறைக்கதவைத் திறந்து பார்த்தார்.
8. பட்டணங்களில் உயர்ந்த கட்டடங்களைப் பார்க்கலாம்.
9. விவசாயிகள் காய்கறிகளைப் பயிர் செய்தனர்.
10. திலகனின் நெற்றியில் காயம் பட்டது.
11. பெற்றோரை மதித்து நடப்பது நம் கடமையாகும்.
12. வேடன் விரித்த வலையில் புறாக்கள் சிக்கின.
13. சிறுவர்கள் கடற்கரையில் மணல் வீடு கட்டி விளையாடினர்.



14. அத்தை சமைத்த மீன் கறி சுவையாக இருந்தது.
15. சாலை ஓரத்தில் தொடர்வீடுகள் இருந்தன.
16. காற்று பலமாக வீசியதால் இலைகள் உதிர்ந்தன.
17. மாலை வேளையில் சோலையில் நடந்தோம்.



18. பார்கவி பயிற்சிப் புத்தகத்தில் பாடத்தைச் செய்தாள்.
19. ஆசிரியர் கூறிய கதையை ஆர்வத்துடன் கேட்டோம்.

3.3.6 - வல்லின உயிர்மெய் எழுத்தைக் கொண்ட சொற்களை உருவாக்கி எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- பாடப் பகுதியில் உள்ள வாக்கியங்களை வாசித்தல்.
- வாக்கியங்களில் உள்ள வல்லின உயிர்மெய் எழுத்தைக் கொண்ட சொற்களைப் பட்டியலிடுதல்.
- வல்லின உயிர்மெய் எழுத்தைக் கொண்ட சொற்களை உருவாக்கி எழுதுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 82

பாடம் 4

# செய்யுளும் மொழியணியும்

## கொன்றை வேந்தனையும் பொருளையும் அறிக.



இவர் திருமதி யாழினி. இவர் என் தமிழ்மொழி ஆசிரியை. தமிழ்மொழியை நான் ஆர்வத்துடன் கற்கிறேன்.



இவர் திருவாளர் இளங்கோ. இவர் கணிதப் பாடத்தைப் போதிக்கிறார். நாங்கள் அனைவரும் இப்பாடத்தைக் கருத்தூன்றிக் கற்போம்.



இவர் திருமதி ஜமிலா. இவர் என் வகுப்பாசிரியை. எண்களும் மொழியும் நமக்கு இரண்டு கண்கள் போலாகும் என இவர் கூறுவார்.

### கொன்றை வேந்தனும் பொருளும்

- **எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.**
  எண்களையும் மொழியையும் நமது இரு கண்களுக்கு ஒப்பானதாகக் கருத வேண்டும்.

4.2.1 - ஒன்றாம் ஆண்டுக்கான கொன்றை வேந்தனையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- பாடப் பகுதியை வாசித்தல்.
- கொன்றை வேந்தனையும் பொருளையும் அறிந்து கூறுதல்.
- கொன்றை வேந்தனையும் பொருளையும் சரியாக எழுதுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 83

பாடம் 5

# இலக்கணம்

## வல்லின மெய்யெழுத்துகளை அறிந்து பயன்படுத்துக.




சிறுமி ஒருத்தி நடந்து சென்றாள். அவள் மிட்டாய் வாங்கக் கடைக்குச் சென்றாள். அவளின் அப்பா தந்த பணத்தை எடுத்துச் சென்றாள். கடைக்காரரிடம் மிட்டாயைக் காட்டினாள். அவர் கொடுத்த மிட்டாயைப் பெற்றுக் கொண்டாள். அவருக்கு நன்றி கூறினாள். சாலை ஓரமாக நடந்தாள். பாதுகாப்பாக வீட்டை அடைந்தாள்.





பள்ளி விடுமுறை வந்தது. பாட்டியின் வீட்டிற்குச் சென்றோம். என் பெற்றோரும் உடன் வந்தனர். தாத்தாவும் பாட்டியும் எங்களை வரவேற்றனர். நாங்கள் பழத்தோட்டத்திற்குச் சென்றோம். அங்குள்ள பழங்களைச் சுவைத்தோம். ஆற்றோரம் நடந்தோம். இயற்கைக் காட்சிகளை ரசித்தோம். மறுநாள் மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினோம்.

5.1.3 - வல்லின மெய்யெழுத்துகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வல்லின மெய்யெழுத்துகளை விளக்குதல்.
- பத்திகளில் உள்ள வல்லின மெய்யெழுத்துகளை அடையாளம் கண்டு கூறுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 84



# தொகுதி 14

## பாடம் 1 அன்பாய் இருப்போம்

### பாடி மகிழ்க.

அன்பாய்ப் பிறரிடம் பழகு
ஆசை குறைத்தல் அழகு
இன்பம் தருவது சேவை
ஈவது என்றும் தேவை ***(அன்பாய்)***

உடலைக் காப்பது கடமை
ஊரைப் பகைப்பது மடமை
என்றும் நட்பை விரும்பு
ஏளனம் செய்வது குறும்பு ***(அன்பாய்)***

ஐயம் தீர்த்தால் அறிவே
ஒற்றுமை வாழ்வில் உயர்வே
ஓதி ஒழுகல் திறமே
ஔவை சொன்னது அறமே ***(அன்பாய்)***





1.2.5 - இடையின உயிர்மெய் எழுத்துகளை ஒலிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- ‘அகரம் தமிழுக்குச் சிகரம்’ எனும் பாடலின் இராகத்தில் பாடுதல்.
- கவிதையில் உள்ள இடையின உயிர்மெய் எழுத்துகளை வரிசைப்படுத்தி ஒலித்தல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 1,2

பாடம் 2

# பள்ளியில் முதல் நாள்

## வாசித்து அறிக.







பள்ளி செல்லும் நாள் வந்தது. அப்பா தேவையான பொருள்களை வாங்கித் தந்தார். அரவிந்தன் அதிகாலையில் எழுந்தான். பல் துலக்கிக் குளித்தான். பள்ளிச் சீருடை அணிந்தான்.

அப்பா பள்ளிக்கு அழைத்துச் சென்றார். நுழைவாயிலில் சில ஆசிரியர்கள் நின்றனர். அரவிந்தன் வணக்கம் கூறினான். மாணவர்கள் வரிசையாக வகுப்பறைக்குச் சென்றனர். அரவிந்தன் மகிழ்ச்சி அடைந்தான். ஆசிரியர் பேசிய தமிழ்மொழியை ரசித்தான். தமிழ்ப்பள்ளிக்கு அனுப்பிய தன் பெற்றோருக்கு நன்றி கூறினான்.

### உயர்நிலைச் சிந்தனை

பள்ளியில் முதல் நாள் எப்படி இருந்தால் சிறப்பாக இருக்கும் என்பது பற்றி உன் எண்ணத்தைக் கூறுக.

2.2.5 - இடையின உயிர்மெய் எழுத்தைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- பாடப் பகுதியைப் பிழையற வாசித்தல்.
- பாடப் பகுதியில் உள்ள இடையின உயிர்மெய் எழுத்துச் சொற்களை அடையாளம் கண்டு வாசித்தல்.
- இடையின உயிர்மெய் எழுத்துகள் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசித்தல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 3

பாடம் 3

# மீராவின் ஓவியம்

## வாசித்து எழுதுக.

மீரா சிறப்பாக ஓவியம் வரைவாள். பள்ளியில் கலைக்கல்விப் பாடத்தில் நிறைய ஆர்வம் காட்டுவாள். பள்ளியில் நடந்த ஓவியப் போட்டியில் கலந்து கொண்டாள். அழகான ஓவியம் வரைந்தாள். முதல் பரிசை வென்றாள். அனைவரும் மீராவைப் பாராட்டினர்.






துளசியும் கண்ணகியும் நெருங்கிய தோழிகள். இருவரும் ஒரே பள்ளியில் படித்தனர். ஆசிரியர் கொடுக்கும் வீட்டுப் பாடங்களை இருவரும் சேர்ந்தே செய்வர். இருவரும் பள்ளிப் பேருந்தில் ஏறிச் செல்வர். மூத்தவர் சொல்லைக் கேட்டு நடப்பதில் இருவரும் சிறந்தவர்கள்.

**3.3.8 -** இடையின உயிர்மெய் எழுத்தைக் கொண்ட சொற்களை உருவாக்கி எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- பாடப் பகுதியில் உள்ள பத்திகளை வாசித்தல்.
- பத்திகளில் உள்ள இடையின உயிர்மெய் எழுத்துகளைக் கொண்ட சொற்களை உருவாக்கி எழுதுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 4

பாடம் 4

# செய்யுளும் மொழியணியும்

## பழமொழியையும் பொருளையும் அறிக.



தாத்தா விடுகதைகள், புதிர்க்கதைகள் கூறுவதில் கெட்டிக்காரர். தினமும் இரவில் எனக்கும் தங்கைக்கும் புதிர்க்கதைகள் கூறுவார்.

தாத்தா இளமைக் காலத்தில் வாசித்துத் தெரிந்து கொண்ட கதைகளை இன்னும் மறக்கவில்லை. அன்று படித்தவை அனைத்தும் இன்றுவரை மனத்தில் நிலையாக இருக்கிறதென்று எங்களிடம் அடிக்கடி கூறுவார்.

இளமைக் காலத்தில் கற்கும் அனைத்தும் சிலையில் பொறிக்கப்படும் அழியாத எழுத்துகள் என எங்களிடம் கூறிப் பெருமைப்படுவார்.

**உயர்நிலைச் சிந்தனை**

உலகில் அழியாச் செல்வங்கள் எனக் கருதப்படுபவை யாவை?

### பழமொழியும் பொருளும்

- **இளமைக் கல்வி சிலையில் எழுத்து.**
  இளமைக் காலத்தில் கற்கப்படும் கல்வி சிலையில் பொறிக்கப்பட்ட எழுத்து அழியாதிருப்பதைப் போல மனத்தில் அழியாமல் நிலைத்திருக்கும்.

4.7.1 - ஒன்றாம் ஆண்டுக்கான பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து கூறுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- பாடப் பகுதியைப் பிழையற வாசித்தல்.
- பழமொழியையும் பொருளையும் விளக்குதல்.
- பழமொழிக்கேற்ற சூழலை மாணவர்கள் உருவாக்கிக் கூறுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 5

பாடம் 5

# இலக்கணம்

## இடையின மெய்யெழுத்துகளை அறிக.

- கடல் கொந்தளிப்பால் பேரலைகள் தோன்றின.
- வேகமாக ஓடிய எலியைப் பூனை பாய்ந்து பிடித்தது.
- மாணவர்கள் தமிழ் வாழ்த்துப் பாடினர்.
- நாய் எலும்புத் துண்டை கவ்விக் கொண்டு ஓடியது.
- பெண்கள் சேலை அணிந்து கோயிலுக்குச் சென்றனர்.
- ஆசிரியர் கேள்விகளுக்கு விளக்கம் தந்தார்.
- கயல்விழி அழகான வாழ்த்து அட்டை தயார் செய்தாள்.
- திருடன் காவல் அதிகாரியிடம் பொய்யுரைத்தான்.
- கனத்த மழையால் மண் சரிந்து விழுந்தது.

ய்
ர்
ல்
வ்
ழ்
ள்











5.1.5 - இடையின மெய்யெழுத்துகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- இடையின மெய்யெழுத்துகளை நினைவு கூரச் செய்தல்.
- இடையின மெய்யெழுத்துகளையும் சொற்களையும் உருவாக்கிக் கூறுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 6

# தொகுதி 15

## பாடம் 1 குறிலும் நெடிலும்

### சரியாக ஒலித்திடுக.




1.2.6 - குறில், நெடில் எழுத்துகளை ஒலிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- குறில், நெடில் எழுத்துகளைச் சரியாக ஒலித்தல்.
- குறில், நெடில் சொற்களைச் சரியாக ஒலித்தல்.
- மாணவர்கள் குமிழ் வரிபடத்தில் குறில், நெடில் சொற்களை எழுதப் பணித்தல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 7,8

பாடம் 2

# ஓசை அறிவோம்

## வாசித்து அறிக.




2.2.6 - குற்றெழுத்தில் தொடங்கும் சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.
2.2.7 - நெட்டெழுத்தில் தொடங்கும் சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- குற்றெழுத்து, நெட்டெழுத்து ஆகியவற்றை அறிமுகம் செய்தல்.
- குற்றெழுத்திலும் நெட்டெழுத்திலும் தொடங்கும் சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிக்கச் செய்தல்.
- குற்றெழுத்து, நெட்டெழுத்துச் சொற்களைக் கண்டறிந்து பட்டியலிடுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : ௯

பாடம் 3

# குற்றெழுத்தும் நெட்டெழுத்தும்

## சொற்களை உருவாக்கி எழுதுக.




3.3.7 - குற்றெழுத்தில் தொடங்கும் சொற்களை உருவாக்கி எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- பாடப் பகுதியில் உள்ள சொற்களைப் பிழையற வாசித்தல்.
- குற்றெழுத்தில் தொடங்கும் பல சொற்களை உருவாக்கிப் பட்டியலிடுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 10




3.3.10 - நெட்டெழுத்தில் தொடங்கும் சொற்களை உருவாக்கி எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- சொற்களைப் பட்டியலிடுதல்.
- நெட்டெழுத்தில் தொடங்கும் பல சொற்களைக் கண்டறிந்து எழுதி வாசித்தல்.
- நெட்டெழுத்தில் தொடங்கும் சொற்களை உருவாக்கிப் பட்டியலிடுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 11

பாடம் 4

# செய்யுளும் மொழியணியும்

## பழமொழியை அறிக.



மழைக் காலத்தின் செழிப்பை ரசித்த வண்ணம் இரு தவளைகள் தாவிக் குதித்தன.



தற்செயலாக முற்றத்தின் கீழிருந்த மோர்ப் பானையில் தவறி விழுந்தன.



வெளிவர முடியாத ஒரு தவளை மோரில் மூழ்கி மாண்டது.



மற்றொரு தவளை யோசித்தது. வேகமாக நீச்சல் அடித்தது. வேகமாக அடித்ததில் வெண்ணெய்க் கட்டி உருவானது.



வெண்ணெய்க் கட்டியின் மேல் ஏறி தவளை தப்பிச் சென்றது.

### பழமொழியும் பொருளும்

- **முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார்.**
  எந்தவொரு செயலிலும் முயற்சியோடு ஈடுபடுபவர்க்கு அச்செயலில் வெற்றி கிட்டுவது உறுதி.

4.7.1 - ஒன்றாம் ஆண்டுக்கான பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து கூறுவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- பாடப் பகுதியில் உள்ள கதையை வாசித்தல்.
- பழமொழியையும் பொருளையும் விளக்கிக் கூறுதல்.
- கதையை மாணவர்கள் சொந்த நடையில் கூறப் பணித்தல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 12, 13



பாடம் 5

# இலக்கணம்

## உயிர்மெய்க் குறில், நெடில் அறிக.




அழகு நிலவு வானில் உலவுகிறாள்.
ஆடல் அழகி மேடையில் ஆடுகிறாள்.




கடல் காற்றுக்கு இல்லை வேலி.
காட்டு வழி வாராதே தோழி.




சந்தனக் கிண்ணம் ஏந்தினாள் தங்கை.
சாம்பார் சாதம் சமைத்தாள் மங்கை.




பஞ்சு மிட்டாய் கேட்டாள் வாணி.
பாட்டுப் புத்தகம் கொடுத்தாள் ராணி.




மணல் வீடு கட்டினர் அழகுச் சிறுமிகள்.
மாமரம் ஏறின சிறிய எறும்புகள்.




மின்னல் ஒளி வானில் காண்.
மீனவர் வாழ்க்கை நீரில்தான்.



5.1.6 - உயிர்மெய்க் குறில் எழுத்துகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.
5.1.7 - உயிர்மெய் நெடில் எழுத்துகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- பாடப் பகுதியில் உள்ள வாக்கியங்களை வாசிக்கச் செய்தல்.
- வாக்கியங்களில் உள்ள உயிர்மெய்க்குறில் எழுத்துகளைச் சரியாகக் கூறுதல்.
- வாக்கியங்களில் உள்ள உயிர்மெய் நெடில் எழுத்துகளைச் சரியாகக் கூறுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 14, 15

தொகுதி 16

பாடம் 1

# நம் தெய்வம்

## பாடலில் குறில், நெடில் எழுத்துகளை ஒலித்திடுக.



அம்மா அப்பா நம்தெய்வம்
நம்முடன் வாழும் நல்தெய்வம்
நம்மால் நடப்பது ஒன்றுமில்லை
நாளும் அவர்வழி சென்றிடுவோம்!

அன்பால் நம்மைக் காப்பவராம்
அறிவால் நம்மை வளர்ப்பவராம்
துன்பம் தன்னைத் தீர்ப்பவராம்
இன்பம் தினம்தினம் சேர்ப்பவராம்!

அறுசுவை உணவுகள் படைப்பவராம்
அழகாய் உடைகளும் கொடுப்பவராம்
பொறுமையாய்ப் பணிகள் செய்பவராம்
பொன்னடி போற்றிப் பணிந்திடுவோம்!

- குழந்தைப் பாடல்



1.2.6 - குறில், நெடில் எழுத்துகளை ஒலிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- பாடலை நயத்துடன் பாடச் செய்தல்.
- பாடலில் குறில், நெடில் எழுத்துகளை அடையாளம் காணுதல்.
- குறில், நெடில் எழுத்துகளைச் சரியாக ஒலித்தல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 16, 17

பாடம் 2

# சொற்கள் இரண்டு

## வாசித்து அறிக.

| | |
|---|---|
| மணி | அடி |
| கனி | பறி |
| கிளி | பிடி |
| தமிழ் | படி |
| அரிசி | இடி |
| பழம் | பிழி |

| | |
|---|---|
| விடை | எழுது |
| வழி | விடு |
| இடம் | பிடி |
| பரிசு | கொடு |
| பல் | துலக்கு |
| கல் | அணை |

| | |
|---|---|
| நீல | நிறம் |
| நீர் | வாளி |
| சீக்கிரம் | போ |
| வீர | வாள் |
| மீன் | முள் |
| பீரங்கி | சத்தம் |

| | |
|---|---|
| நீண்ட | வழி |
| நீச்சல் | குளம் |
| வீண் | பழி |
| மீன் | கறி |
| மீனவர் | கிராமம் |
| சேமித்து | வை |

| | |
|---|---|
| நெல் | மணி |
| குடம் | தூக்கு |
| உளுந்து | வடை |
| குழாய் | நீர் |
| நத்தை | ஓடு |
| பாடல் | பாடு |

| | |
|---|---|
| முறுக்கு | வாங்கு |
| கடல் | காற்று |
| கால் | எலும்பு |
| மூலிகை | மருந்து |
| சிவப்பு | மிளகாய் |
| பெரிய | காது |



2.2.12 - இரண்டு சொற்கள் கொண்ட வாக்கியங்களைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- பாடப் பகுதியில் உள்ள இரண்டு சொற்கள் கொண்ட வாக்கியங்களைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசித்தல்.
- வாக்கியங்களைச் சொல்வதெழுதுதலாக எழுதப் பணித்தல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 18

பாடம் 3

# ஓரெழுத்தும் ஈரெழுத்தும்

## ஓரெழுத்துச் சொற்களை அறிந்து எழுதுக.



தந்தை கொடுத்தார் **பை**
தம்பி கொடுத்தான் **கை**





முக்கனிகளில் ஒன்று **மா**
உணவைச் சுவைப்பது **நா**





அம்மா விரட்டினாள் **ஈ**
வீரர் அணைத்தார் **தீ**





தீமை செய்யாதே **போ**
உதவி செய்ய **வா**





பொங்கல் மாதம் **தை**
பொருளை அங்கே **வை**





சிறுவன் சட்டையில் **மை**
சிறுமி பார்க்க **ஐ**



மை | மா | ஈ | தீ | தை | ஐ | கை | பை | போ | வை | வா | நா

3.3.1 - ஓரெழுத்துச் சொற்களை எழுதுவர்.
3.3.2 - ஈரெழுத்துச் சொற்களை உருவாக்கி எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- பாடப் பகுதியில் உள்ள வாக்கியங்களை வாசித்தல்.
- ஓரெழுத்துச் சொற்களை எழுதுதல்.
- ஓரெழுத்துச் சொற்களுக்கு ஏற்ப மாணவர்கள் வாக்கியங்கள் அமைத்துக் கூறுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 19

## ஈரெழுத்துச் சொற்களை அறிந்து எழுதுக.



அப்பா வளர்த்தார் **பசு**
நோயைப் பரப்பும் **கொசு**





காட்டில் வசிக்கும் **புலி**
கறிக்கு உதவும் **புளி**





பசியால் வயிற்று **வலி**
பெரியவர் கேட்டார் **வழி**





பறவை கட்டியது **கூடு**
நல்ல கீதம் **பாடு**





செடியில் இருப்பது **முள்**
வீசி எறிந்தான் **கல்**





அண்ணன் முகத்தில் **பரு**
மக்கள் வசிக்கும் **தெரு**





நன்றாய் நீச்சல் **அடி**
ஒவ்வொரு நாளும் **படி**



3.3.1 - ஓரெழுத்துச் சொற்களை உருவாக்கி எழுதுவர்.
3.3.2 - ஈரெழுத்துச் சொற்களை உருவாக்கி எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- பாடப் பகுதியில் உள்ள வாக்கியங்களை வாசித்தல்.
- ஈரெழுத்துச் சொற்களுக்கு ஏற்ப வேறு வாக்கியங்களை உருவாக்கி எழுதுதல்.
- வாக்கியங்களைச் சொல்வதெழுதுதலாக எழுதப் பணித்தல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 20

பாடம் 4

# செய்யுளும் மொழியணியும்

## மரபுத்தொடரை அறிக.




வகுப்பாசிரியர் திருமதி பரிமளா வந்தார். மாணவர்களிடம் கல்விச் சுற்றுலாவைப் பற்றி விளக்கினார்.

மாணவர்கள் ஆர்வத்துடன் கேட்டனர். தங்கள் பெற்றோரிடம் அனுமதி பெறும் விண்ணப்பத்தை ஆசிரியரிடம் பெற்றனர்.



வளர்மதியும் மகிழ்ச்சியுடன் விண்ணப்பத்தைப் பெற்றுக் கொண்டாள். அப்பாவைத் தேடினாள். அப்பா வரவேற்பறையில் ஓய்வாக அமர்ந்திருந்தார்.



வளர்மதி அப்பாவிடம் ஆசிரியர் கூறிய விவரங்களைத் தெளிவாகக் கூறினாள். அப்பாவும் வளர்மதி சுற்றுலாவில் கலந்துகொள்ளச் **செவி சாய்த்தார்**. வளர்மதி அளவிலா மகிழ்ச்சி அடைந்தாள். அப்பாவிடம் அனுமதிக் கையெழுத்துப் பெற்றாள்.

### மரபுத்தொடரும் பொருளும்

- **செவி சாய்த்தல்**
  உடன்படுதல்/இணங்குதல்/இசைதல்

4.6.1 - ஒன்றாம் ஆண்டுக்கான மரபுத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து கூறுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- பாடப் பகுதியில் உள்ள கதையை வாசித்தல்.
- மரபுத்தொடரையும் பொருளையும் விளக்குதல்

நடவடிக்கை நூல் பக்கம் : 21

பாடம் 5

# இலக்கணம்

## ஒருமை பன்மை அறிந்து எழுதுக.

பொருள்களின் எண்ணிக்கையை உணர்த்துவது எண் ஆகும். எண் இருவகைப்படும். அவை **ஒருமை பன்மை** எனப்படும். ஒரு பொருளை மட்டும் குறிப்பது **ஒருமை**; ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களைக் குறிப்பது **பன்மை**.

**எடுத்துக்காட்டு :**

| ஒருமை | பன்மை |
|---|---|
| பெண் | பெண்கள் |
| நாற்காலி | நாற்காலிகள் |

1

கோழி


கோழிகள்

2

மீன்


மீன்கள்

3

குடை


குடைகள்

4

சட்டை


சட்டைகள்

5

படகு


படகுகள்

6

வீடு


வீடுகள்

5.3.3 - ஒருமை பன்மையில் 'கள்' விகுதி அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- ஒருமை பன்மை பற்றி விளக்கி உரையாடுதல்.
- பாடப் பகுதியில் உள்ள சொற்களைச் சரியாக வாசித்து அறிதல்.
- ஒருமை பன்மை சொற்களை மாணவர்கள் சுயமாகக் கூறப் பணித்தல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 22,23

# தொகுதி 17

## பாடம் 1 கிரந்த எழுத்துகள்

### உரையாடுக.




பக்ஷி

ஹனுமான்

ஸர்ப்பம்

ஸ்ரீதேவி

புஷ்பம்

கஜம்

1.2.7 - கிரந்த எழுத்துகளை ஒலிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- மாணவர்களுக்குக் கிரந்த எழுத்துகளை அறிமுகம் செய்தல்.
- கிரந்த எழுத்துகளைச் சரியாக ஒலித்தல்.
- கிரந்த எழுத்துச் சொற்களைச் சரியாக ஒலித்தல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 24

பாடம் 2

# வாசித்து மகிழ்வோம்

## வாசித்து அறிக.







- ஸர்ப்பம் புதருக்குள் சென்றது.
- ஜாடியில் ஜலம் இருந்தது.
- சுபாஷினி கூஜாவைக் கையில் எடுத்தாள்.
- பக்ஷி பறந்து சென்றது.
- இவரின் பெயர் ஹஜி இஸ்மாயில்.
- விடுமுறையில் பத்து காஜா எனும் இடத்திற்குச் சென்றோம்.

2.2.8 - கிரந்த எழுத்துகளை வழக்கிலுள்ள சொல், சொற்றொடர்வழி அறிந்து சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**
- பாடப் பகுதியில் உள்ள உரையாடலை வாசித்தல்.
- கிரந்த எழுத்துச் சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசித்தல்.
- கிரந்த எழுத்துகள் கொண்ட சொற்றொடர்களைச் சரியான உச்சரிப்புடன் வாசித்தல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 24

பாடம் 3

# வாக்கியச் சரம்

## வாசித்து எழுதுக.



**ஸ்ரீமதி** கடைக்குச் சென்றாள்.

**ஹாரம்** அழகாக இருந்தது.



**ஸ்ரீவள்ளி** புத்தகம் படிக்கிறாள்.

சாலை ஓரம் **ஸர்ப்பம்** ஒன்று இருந்தது.

**ஜெயஸ்ரீ** இனிமையாகப் பாடுவாள்.



**கஜம்** தும்பிக்கையை உயர்த்தியது.

**திரு.ஹஜி தாஜூத்தீன்** என் பள்ளி ஆசிரியர்.

**ஜாலுர் கெமிலாங்** நமது தேசியக் கொடி.



**ஜானகி ஜாடியில் ஜலம்** ஊற்றினாள்.

**ஸ்ரீராமனும் ஹரிஹரனும்** தோழர்கள்.

3.3.11 - கிரந்த எழுத்தைக் கொண்ட சொற்களை உருவாக்கி எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- பாடப் பகுதியில் உள்ள வாக்கியங்களை வாசித்தல்.
- கிரந்த எழுத்துச் சொற்களைச் சரியாக ஒலித்தல்.
- கிரந்த எழுத்தைக் கொண்ட சொற்களை உருவாக்கி எழுதுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 24

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## திருக்குறளையும் பொருளையும் அறிக.




### திருக்குறளும் பொருளும்

- **கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
  **நிற்க அதற்குத் தக. (391)**

  கற்கத் தகுந்த நூல்களைக் குற்றமறக் கற்க வேண்டும்; அவ்வாறு கற்றபிறகு கற்ற கல்விக்குத் தகுந்தபடி நடந்துகொள்ள வேண்டும்.

4.3.1 - ஒன்றாம் ஆண்டுக்கான திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- திருக்குறளையும் அதன் பொருளையும் விளக்குதல்.
- மாணவர்கள் திருக்குறளையும் பொருளையும் மனனம் செய்து கூறப் பணித்தல்.
- அழகான கையெழுத்தில் எழுதப் பணித்தல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 25

பாடம் 5 இலக்கணம்

## வாசித்துப் பயன்படுத்துக.

ஸ ஷ ஹ ஜ ஸ்ரீ க்ஷ

ஸர்ப்பம் ஒன்று ஊர்ந்து வந்தது. அதைக் கண்ட ஜானகி அலறினாள். அண்டை வீட்டுக்காரர் ஜமீல் அஹமது ஓடி வந்தார். பிரம்பு ஒன்றை எடுத்தார். ஸர்ப்பம் புதருக்குள் சென்று விட்டது.



ஸ்ரீமதிக்கு ரோஜா என்றால் மிகவும் பிடிக்கும். அவளது அம்மா டத்தின் ஸ்ரீ ஜெயா அவளுக்கு அழகிய புஷ்பங்கள் வாங்கித் தருவார். அவள் அதனை ஜாடியில் வைத்து அழகுபடுத்துவாள்.



ஸ்ரீமலரும் ஹரினியும் நல்ல தோழிகள். இருவரும் ஒரே வகுப்பில் படிக்கின்றனர். ஓய்வு நேரத்தில் ஜமிலாவுடன் சேர்ந்து விளையாடுவர்.



5.2.1 - கிரந்த எழுத்துகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- வாசிப்புப் பகுதியை வாசித்தல்.
- கிரந்த எழுத்துச் சொற்களைப் பட்டியலிடுதல்.
- வேறு சில கிரந்த எழுத்துச் சொற்களைக் கூறுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 26

# தொகுதி 18

## பாடம் 1 சரியாக இயங்குக

### கேட்டு உரையாடுக.













1.3.1 - செவிமடுத்த கட்டளையையும் வேண்டுகோளையும் நிறைவேற்றுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாய்மொழியாகச் சில கட்டளை வாக்கியங்களையும் வேண்டுகோள் வாக்கியங்களையும் செவிமடுக்கச் செய்தல்.
- பாடப் பகுதியில் உள்ள வாக்கியங்களை வாசித்தல்.
- செவிமடுத்த கட்டளை, வேண்டுகோள் வாக்கியங்களுக்கு ஏற்ப மாணவர்களைத் துலங்கப் பணித்தல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 27

பாடம் 2

# சுட்டிப் பையன்

## வாசித்து அறிக.



சுட்டிப் பையன் குமரன்
பட்டுச் சட்டை மாட்டி
சிட்டாய் வண்டி ஏறி
சந்தைக் கடை சென்றான்!

பஞ்சு மிட்டாய் அங்கே
பல வண்ணம் கண்டான்
விரைந்து ஓடிச் சென்று
மிட்டாய் விலை கேட்டான்!

பஞ்சு மிட்டாய் மாமா
பல்லைக் காட்டிச் சிரித்தார்
மிட்டாய் கேட்ட பையா
துட்டு எங்கே என்றார்!

கெட்டிப் பையன் குமரன்
துட்டு இல்லை என்றான்
குட்டிப் பையன் உனக்கு
மிட்டாய் இல்லை என்றார்!

- சிறுவர் பாடல்கள்

2.4.2 - சொற்றொடரை வாசித்துப் புரிந்து கொள்வர்.

**ஆசிரியர் குறிப்பு**

- பாடலைப் பாடுதல்.
- சொற்களைச் சரியாக உச்சரிக்கப் பணித்தல்.
- பாடலைப் பாடி நடித்துக் காட்டுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 28

பாடம் 3

# முழு நிலா

## வாசித்து எழுதுக.

வெள்ளைப் புறா வானத்தில் பறந்தது.

இரவில் முழு நிலாவைக் கண்டேன்.

புலிப்பல் கூர்மையாக இருந்தது.

பச்சைக் கிளி பறந்தது.

அம்மா வெள்ளிக் கிண்ணத்தில் பால் ஊற்றினார்.

சுண்டு விரலில் காயம் பட்டது.

உள்ளூர் நாடகத்தைப் பார்த்தனர்.

நாட்டுப் பண் ஒலித்தது.

தமிழ்மொழிப் பாடம் படித்தோம்.

அவர் அன்பான ஆசிரியர்.

அப்பா தண்ணீர்க் குடம் வாங்கினார்.



3.4.2 - சொற்றொடரைக் கொண்டு வாக்கியம் அமைப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- பாடப் பகுதியில் உள்ள வாக்கியங்களைப் பிழையற வாசித்தல்.
- வாக்கியங்களில் உள்ள சொற்றொடர்களை மாணவர்கள் கண்டறியப் பணித்தல்.
- சொற்றொடர்களுக்கு ஏற்ப வேறு வாக்கியங்களை அமைக்கப் பணித்தல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 29,30

பாடம் 4

# செய்யுளும் மொழியணியும்

## ஆத்திசூடியையும் பொருளையும் அறிக.

அம்மா பலவகை சுவையான உணவுகளைச் சமைத்தார். மதிய உணவு உண்ண அனைவரும் அமர்ந்தோம். வயோதிகர் ஒருவர் உணவு கேட்டு வாசலில் நின்றார். அவருக்கு முதலில் உணவு கொடுத்து அனுப்பினார் அப்பா.



### ஆத்திசூடியும் பொருளும்

- **ஐய மிட்டுண்.**

  பசியென வந்தவர்க்கு உணவிட்ட பின்னரே உண்ண வேண்டும்.

பசுமையைப் பாதுகாக்க மரங்களை நட வேண்டும். சுத்தமான காற்று கிடைக்க மரங்கள் அவசியம். நோய்களைத் தவிர்க்க சுத்தத்தைப் பேண வேண்டும். வீடு, சுற்றுச்சூழல் ஆகியவற்றை என்றும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். இயற்கையைப் பாதுகாக்க அனைவரும் பாடுபட வேண்டும்.



### ஆத்திசூடியும் பொருளும்

- **ஒப்புர வொழுகு.**

  உலக நடைமுறை அறிந்து அதன்படி நடந்துகொள்ள வேண்டும்.

4.1.1 - ஒன்றாம் ஆண்டுக்கான ஆத்திசூடியையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- பாடப் பகுதியில் உள்ள பத்திகளைப் பிழையற வாசித்தல்.
- ஆத்திசூடியையும் பொருளையும் விளக்குதல்.
- ஆத்திசூடியையும் பொருளையும் மனனம் செய்து எழுதுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 31

பாடம் 5

# இலக்கணம்

## வாக்கிய வகைகள்.

- தமிழ் வாக்கியங்களைக் கருத்து, அமைப்பு என்னும் அடிப்படையில் பிரிக்கலாம்.
- கருத்து அடிப்படையில் நான்கு வகை வாக்கியங்கள் உள்ளன.



i) **செய்தி வாக்கியம் - தகவலை வெளிப்படுத்துதல்.**
**எடுத்துக்காட்டு:**
நேற்று மழை பெய்தது.

ii) **வினா வாக்கியம் - தகவலைப் பெறுதல்.**
**எடுத்துக்காட்டு:**
இது யாருடைய வீடு?

iii) **விழைவு வாக்கியம் - வேண்டுகோள், கட்டளை, சபித்தல், வாழ்த்துதல் ஆகிய அடிப்படையில் அமையும்.**
**எடுத்துக்காட்டு:**
- எனக்கு இந்நூலைத் தருக. (வேண்டுகோள்)
- பாடம் படித்து வா. (கட்டளை)
- ஒழிந்து போ! (சபித்தல்)
- பல்லாண்டு வாழ்க! (வாழ்த்துதல்)

**கட்டளை வாக்கியங்கள்**

- நேராக நில்லுங்கள்
- செய்யுளை மனனம் செய்
- உரக்க வாசி
- புற்களை மிதிக்காதே
- எச்சில் துப்பாதே
- பயிற்சிகளைச் செய்
- கவனமாகக் கேள்
- சுத்தத்தைப் பேணு

5.4.1 - கட்டளை வாக்கியத்தை அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- பாடப் பகுதியில் உள்ள வாக்கியங்களை வாசிக்கப் பணித்தல்.
- சரியான கட்டளை வாக்கியங்களை அறிந்து கூறுதல்.
- சரியான கட்டளை வாக்கியங்களை அறிந்து எழுதுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 32

தொகுதி 19

பாடம் 1

# கேள்வியும் பதிலும்

**கேட்டு உரையாடுக.**






1.5.1 - யார், எது, என்ன எனும் கேள்விகளுக்கேற்பப் பதில் கூறுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- பாடப் பகுதியில் காணும் படங்களைப் பார்த்து உரையாடுதல்.
- யார், எது, என்ன எனும் கேள்விகளைக் கேட்டு உரையாடுதல்.
- யார், எது, என்ன எனும் கேள்விகளுக்கும் பதில் கூறுவர்.

நடவடிக்கை நூல் பக்கம் : 33

பாடம் 2

# மூன்று சொற்கள்

## வாசித்து அறிக.

1 தினமும் இறைவனை வணங்கு.
மனம் மகிழ்ச்சி அடையும்.



2



எழிலரசி ஆடை வாங்கினாள்.
புத்தாடை அவளுக்குப் பிடிக்கும்.

3 கலைமதி பூங்கா சென்றாள்.
ஊஞ்சல் ஆடி மகிழ்ந்தாள்.



4



அம்மா பூச்சரம் தொடுக்கிறார்.
கோவிலுக்கு எடுத்துச் செல்வார்.



5 சிங்கம் குகையில் வசிக்கும்.
அது மாமிசம் உண்ணும்.

6



மாதவன் மாம்பழம் பறித்தான்.
பழங்கள் உடலுக்கு நல்லது.

2.2.13 - மூன்று சொற்கள் கொண்ட வாக்கியங்களைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- பாடப் பகுதியில் உள்ள வாக்கியங்களைப் பிழையற வாசித்தல்.
- மூன்று சொற்கள் கொண்ட வாக்கியங்களைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசித்தல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 34

பாடம் 3

# சொல்லில் வாக்கியம்

## வாசித்து எழுதுக.

1 **கூடு**



குருவி **கூடு** கட்டுகிறது.

2 **கன்று**



**கன்று** பசுவுடன் இருக்கிறது.

3 **புற்றில்**



பாம்பு **புற்றில்** வசிக்கிறது.

4 **தண்ணீர்**



சிறுவன் **தண்ணீர்** குடிக்கிறான்.

5 **தாத்தா**



**தாத்தா** தடியூன்றி நடக்கிறார்.

6 **ஆற்றில்**



அப்பா **ஆற்றில்** மீன் பிடிக்கிறார்.

3.4.1 - சொல்லைக் கொண்டு வாக்கியம் அமைப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- பாடப் பகுதியிலுள்ள வாக்கியங்களைப் பிழையற வாசித்தல்.
- கொடுக்கப்பட்ட சொல்லைக் கொண்டு வாக்கியம் அமைத்தல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 35,36

பாடம் 4

# செய்யுளும் மொழியணியும்

## இரட்டைக்கிளவியையும் பொருளையும் அறிக.

தந்தை வெளிநாட்டிலிருந்து திரும்பினார். பிள்ளைகள் அவரை நோக்கிக் **குடுகுடு** என ஓடினர்.



திருமண வீட்டில் திருடன் புகுந்தான். நகைகளைத் திருடினான். அவனை ஊர் மக்கள் பிடித்துத் **தரதர** எனக் காவல் நிலையத்திற்கு இழுத்துச் சென்றனர்.



அனுமதியின்றி முறுக்கை எடுத்த கனியமுதன் அம்மாவைப் பார்த்ததும் **திருதிரு** என விழித்தான்.



### இரட்டைக்கிளவியும் பொருளும்

- **குடுகுடு**
  குறுகிய எட்டு வைத்து வேகமாக ஓடுவது அல்லது நடப்பது
- **திருதிரு**
  மருட்சியினால் விழித்தல்
- **தரதர**
  தரையோடு இழுக்கும்போது எழும் ஓசை

4.5.1 - ஒன்றாம் ஆண்டுக்கான இரட்டைக்கிளவிகளைச் சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- பாடப் பகுதியில் உள்ள பத்திகளை வாசித்தல்.
- இரட்டைக்கிளவிகளையும் பொருளையும் விளக்குதல்.
- இரட்டைக்கிளவிகளுக்கு ஏற்ப சூழல்களை உருவாக்குதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 37

பாடம் 5 இலக்கணம்

## வினா வாக்கியம்.




1. மங்கை என்ன விளையாட்டு விளையாடுகிறாள்?
2. மேற்காணும் விளையாட்டுகளில் உனக்குப் பிடித்த விளையாட்டு எது?
3. கஜேந்திரனுடன் பூப்பந்து விளையாடுவது யார்?
4. கோகுலன் என்ன செய்கிறான்?
5. எத்தனை பேர் பந்து விளையாடுகிறார்கள்?
6. கோகுலன் ஏன் கவலையாகக் காணப்படுகிறான்?
7. விளையாடுவதால் ஏற்படும் நன்மைகள் யாவை?
8 கோகுலனின் காலில் எப்படிக் காயம் ஏற்பட்டிருக்கும்?

5.4.4 - வினா வாக்கியத்தை அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- பாடப் பகுதியிலுள்ள சூழல் படத்தைப் பார்த்து உரையாடுதல்.
- சூழலுக்கு ஏற்ற வினாக்களை வாசிக்கப் பணித்தல்.
- மாணவர்கள் வினாக்களுக்கான விடையைக் குழு முறையில் கலந்துரையாடி எழுதுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 38

தொகுதி 20

பாடம் 1

# வினா கேட்போம்

## கேட்டு உரையாடுக.

1



முரளிக்கு என்ன நேர்ந்தது? ஏன்?

2



சிறுத்தை என்ன செய்து கொண்டிருக்கிறது? ஏன்?

3



குரங்கு எதைப் பற்றிக் கொண்டு தொங்குகிறது? ஏன்?

4



மேலுள்ள இருவரையும் ஏன் உனக்குப் பிடிக்கும்?

1.6.1 - யார், எது, என்ன எனும் வினாச் சொற்களைச் சரியாகப் பயன்படுத்திக் கேள்விகள் கேட்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- பாடப் பகுதியில் உள்ள வினாச் சொற்களைப் பற்றி உரையாடுதல்.
- வினாச் சொற்களைச் சரியாகப் பயன்படுத்திக் கேள்விகள் கேட்டல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 39,40

## பாடம் 2 அன்பு உள்ளம்

### வாசித்து அறிக.

புலவர் குமணனைத் தேடிச் சென்றார். காட்டினுள் குமணனைக் கண்டார். அவரைப் புகழ்ந்து பாடினார்.



உள்ளம் மகிழ்ந்த குமணன், "உங்களுக்குக் கொடுக்க என்னிடம் ஒன்றும் இல்லையே! " என்று வருந்தினான்.

"புலவரே! என் தலையைக் கொண்டு வருபவர்களுக்குப் பரிசு தருவதாக என் தம்பி இளங்குமணன் அறிவித்துள்ளான். அதனால், என் தலையைக் கொண்டு போய் என் தம்பியிடம் கொடுங்கள். உங்களுக்கு நிறையப் பரிசுகளும் பொற்காசுகளும் கிடைக்கும்," என்றார்.

தமது வாளையும் புலவரிடம் கொடுத்தார். மிகுந்த வேதனையுடன் வாளைப் பெற்றுக் கொண்ட புலவர், இளங்குமணனைக் காணச் சென்றார். காட்டில் நடந்தவற்றைக் கூறினார். தமது அண்ணனின் சிறந்த பண்புகளைப் புரிந்து கொண்டான் இளங்குமணன். மனம் வருந்தினான்; திருந்தினான். மீண்டும் தன் அண்ணன் குமணனை அழைத்து வந்து நாட்டின் அரசனாக்கினான்.

**உயர்நிலைச் சிந்தனை**

நற்குணங்களின் அவசியத்தைப் பற்றி உன் கருத்தைக் கூறுக.

2.2.14 - பத்தியைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- பத்தியைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசித்தல்.
- வாய்மொழியாகக் கேள்விகள் கேட்டு உரையாடுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 41

பாடம் 3

# அறிந்து கொள்வோம்

## வாசித்து அறிக.



கிளியின் அலகு சிவப்பு.
மயில் தோகை அழகு.





கரையை அலை மோதும்.
நண்பனை இங்கு அழை.





புலி வாழுமிடம் வனம்.
புளியம்பழம் புளிக்கும்.





உடலை தேய்த்துக் குளி.
அங்கே ஆழமான குழி.





வானம் நீல நிறம்.
அன்னை சடை நீளம்.





பழங்கள் பழுத்துப் போயின.
வீரர்கள் பலம் மிக்கவர்கள்.





தம்பி மழையில் நனைந்தான்.
பலர் மலை ஏறினர்.



3.3.3 - மூவெழுத்துச் சொற்களை உருவாக்கி எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- பாடப் பகுதியில் உள்ள மூவெழுத்துச் சொற்களை வாசித்துப் பட்டியலிடுதல்.
- மூவெழுத்துச் சொற்களைச் சுயமாக உருவாக்கி எழுதுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 42,43

பாடம் 4

# செய்யுளும் மொழியணியும்

## ஆத்திசூடியை அறிக.

பரிமளம் முதலாம் ஆண்டு மாணவி. அவள் படிப்பில் கெட்டிக்காரி. புத்தகங்களை வாசிப்பதில் அதிக ஆர்வம் காட்டுவாள். இதனால், நண்பர்கள் அவளைப் புத்தகப்புழு என்று செல்லமாக அழைப்பர். பெற்றோரும் பல நல்ல நூல்களை அவளுக்கு வாங்கிக் கொடுப்பார்கள்.



### ஆத்திசூடியும் பொருளும்

- **ஓதுவ தொழியேல்.**

நல்ல நூல்களை நாளும் படிப்பதைக் கைவிடக்கூடாது.

குமுதா ஒரு நிறுவனத்தில் வேலை செய்கிறாள். தன் கடின உழைப்பால் ஓர் உயர் பதவியை வகிக்கிறாள். அவளது முன்னேற்றத்தைக் கண்டு பலர் பொறாமை கொண்டனர். அவளைப் பலவாறு தூற்றியும் பேசினர். ஆனாலும், எதற்கும் அஞ்சாமல் குமுதா மேன்மேலும் உயர்வை நோக்கிப் பிரயாணம் செய்கிறாள். பொறாமை கொண்டவர்கள் எதுவுமின்றித் தத்தளிக்கின்றனர்.



### ஆத்திசூடியும் பொருளும்

- **ஔவியம் பேசேல்.**

பொறாமை கொண்டு பிறரைத் தூற்றிப் பேசக்கூடாது.

4.1.1 - ஒன்றாம் ஆண்டுக்கான ஆத்திசூடியையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- பாடப் பகுதியில் உள்ள பத்திகளை வாசிக்கப் பணித்தல்.
- ஆத்திசூடியையும் பொருளையும் விளக்கிக் கூறுதல்.
- ஆத்திசூடியையும் பொருளையும் விளக்கி எழுதுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 44

பாடம் 5

# இலக்கணம்

## வினா வாக்கியம்.



**மக்கள் எதைப் பார்க்கிறார்கள்?**
மக்கள் யானையைப் பார்க்கிறார்கள்.



**உனக்குப் பிடித்த மிருகம் எது?**
எனக்குப் பிடித்த மிருகம் வரிக்குதிரை.

**வரிக்குதிரையை நீ எங்கே பார்த்தாய்?**
நான் அதை விலங்ககத்தில் பார்த்தேன்.




**நீ ஏன் விலங்ககத்திற்குச் சென்றாய்?**
நான் பல விலங்குகளைப் பார்க்கச் சென்றேன்.



**விலங்ககத்திற்கு யாருடன் சென்றாய்?**
என் குடும்பத்தாருடன் விலங்ககத்திற்குச் சென்றேன்.

5.4.4 - வினா வாக்கியத்தை அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- பாடப் பகுதியையும் வினா விடைகளையும் வாசித்து அறிந்திடப் பணித்தல்.
- வினாக்களைக் கேட்டு விடையறிதல்.
- குழு முறையில் வினா வாக்கியங்களை உருவாக்கி எழுதுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 45

தொகுதி 21

பாடம் 1

# நற்பண்பு

## கேட்டு உரையாடுக.

1




2




3




1.7.1 - மரியாதைச் சொற்களைச் சரியாகப் பயன்படுத்திப் பேசுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- உரையாடல்களை ஏற்ற தொனியுடன் வாசிக்கப் பணித்தல்.
- உரையாடலில் உள்ள மரியாதைச் சொற்களைப் பட்டியலிடுதல்.
- உரையாடலில் பயன்படுத்தக்கூடிய வேறு சில மரியாதைச் சொற்களைப் பயன்படுத்திப் பேசுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 46

பாடம்

# 2 வாக்கியச் சோலை

## வாசித்து அறிக.

சூரியன் உதித்தது.
பூக்களைக் கொய்தோம்.
பறவைகள் பறந்தன.
தண்ணீர் குடித்தோம்.
காற்று வீசியது.
மாணவர் வந்தனர்.
மீன்கள் நீந்தின.

பரிசு கொடுத்தார்.
அக்காள் வந்தாள்.
பழங்கள் வாங்கினோம்.
மருந்து தந்தார்.
மாம்பழம் பறித்தார்.
சிரித்து விளையாடினர்.
கதை சொன்னார்.

அம்மாவுக்குக் காய்ச்சல்.
படுத்து இருந்தார்.
கிண்ணம் எடுத்தார்.
தண்ணீர் பிடித்தான்.
உதவி செய்தான்.
பார்த்து மகிழ்ந்தனர்.
கனவு கண்டோம்.

தூய்மை பேணுவோம்.
பெரிய அரங்கம்.
நடனம் ஆடினர்.
பள்ளிக்குச் சென்றனர்.
பாடங்களைப் படித்தோம்.
பரிசுகளை வென்றோம்.
பாராட்டுகள் பெற்றோம்.

2.2.12 - இரண்டு சொற்கள் கொண்ட வாக்கியங்களைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- பாடப் பகுதியில் உள்ள வாக்கியங்களை வாசிக்கப் பணித்தல்.
- இரண்டு சொற்கள் கொண்ட வாக்கியங்களைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசிக்கப் பணித்தல்.
- மாணவர்கள் குழு முறையில் இரண்டு சொற்கள் கொண்ட வாக்கியங்களை உருவாக்கப் பணித்தல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 47

பாடம் 3

# வெள்ளிக் குடம்

## வாசித்து எழுதுக.



1. அம்மா குத்து விளக்கை ஏற்றினார்.
2. சிறுவர்கள் மணல் வீடு கட்டி மகிழ்ந்தனர்.
3. கோவிலில் தீமிதி விழா நடந்தது.
4. தம்பி காகிதக் கப்பல் செய்தான்.



5. கடல் காற்று உடலுக்கு நல்லது.
6. ஆற்று நீரில் நீச்சல் அடித்தனர்.
7. ஆலயமணி காலையில் ஒலித்தது.



8. வெள்ளி ரதம் நகரை ஊர்வலம் வந்தது.
9. சத்துள்ள உணவை உண்ண வேண்டும்.



10. திருவிழாவின் போது வாணவேடிக்கைகள் பார்த்தோம்.
11. அண்ணன் அழகான தங்க மீன்களை வளர்த்தார்.
12. பக்தர்கள் பால் குடத்தை ஏந்திச் சென்றனர்.



13. மாணவர்கள் பள்ளி நூலகத்தில் நுழைந்தனர்.

3.4.2 - சொற்றொடரைக் கொண்டு வாக்கியம் அமைப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**
- பாடப் பகுதியைப் பிழையற வாசித்தல்.
- மாணவர்கள் வாக்கியங்களில் உள்ள சொற்றொடர்களைக் கண்டறிதல்.
- மாணவர்கள் சொற்றொடர்களுக்கான வாக்கியங்களைக் குழு முறையில் உருவாக்குதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 48,49

பாடம் 4

# செய்யுளும் மொழியணியும்

## கொன்றை வேந்தனையும் பொருளையும் அறிக.

இனியன் : இருவரும் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?
அமுதா : நான் புத்தகங்களையும் நாளிதழ்களையும் அடுக்கி வைக்கிறேன்.
விமலன் : நான் தரையைக் கூட்டிச் சுத்தம் செய்கிறேன்.
இனியன் : அனைத்தையும் பெற்றோர் செய்யக் கூறினார்களா?
அமுதா : இல்லை இனியன். எங்கள் பெற்றோர் அலுவலகத்தில் வேலை செய்து வீடு திரும்பும் முன்னர் நாங்களே இவ்வேலைகள் அனைத்தையும் செய்வோம். குறிப்பறிந்து செயல்படும் பிள்ளைகளாக இருப்பது சிறந்தது என்று ஆசிரியர் கூறியதை மறந்துவிட்டாயா இனியன்?
இனியன் : ஆமாம் நண்பர்களே! இனி நானும் என் பெற்றோரின் குறிப்பறிந்து உதவிகள் செய்வேன்.



### கொன்றை வேந்தனும் பொருளும்

- **ஏவா மக்கள் மூவா மருந்து.**

சொல்லாமல் குறிப்பறிந்து செயல்படும் பிள்ளைகள் பெற்றோருக்கு நீண்ட ஆயுளைத் தரும் அமிர்தம் போல் ஆவர்.

4.2.1 - ஒன்றாம் ஆண்டுக்கான கொன்றை வேந்தனையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- பாடப் பகுதியில் உள்ள உரையாடலைப் பாகம் ஏற்று வாசிக்கப் பணித்தல்.
- கொன்றை வேந்தனையும் அதன் பொருளையும் விளக்குதல்.
- கொன்றை வேந்தனையும் பொருளையும் மாணவர்கள் மனனம் செய்து கூறப் பணித்தல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 50

பாடம் 5 

# இலக்கணம்

## வேண்டுகோள் வாக்கியங்களை வாசித்து அறிக.




ஐயா, தயவுசெய்து நூலகம் செல்ல அனுமதி தாருங்கள்.



எனக்கு இக்கதைப் புத்தகத்தை இரவல் தருக.



அண்ணா, தயவுசெய்து மேலேயுள்ள பெட்டியை எடுத்துத் தாருங்கள்.



அம்மா, என் தோழிகளுடன் விளையாடச் செல்ல அனுமதி தாருங்கள்.

5.4.2 - வேண்டுகோள் வாக்கியத்தை அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- சூழலுக்கேற்ற வாக்கியங்களைப் பிழையற வாசிக்கப் பணித்தல்.
- வேண்டுகோள் வாக்கியங்களை ஏற்ற தொனியுடன் கூறுதல்.
- மேலும், சில வேண்டுகோள் வாக்கியங்களை எழுதுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 51

தொகுதி 22

பாடம் 1

# அன்பான உறவுகள்

## கேட்டு உரையாடுக.




| | | |
|---|---|---|
|  | இவர் அப்பாவின் தந்தை | தாத்தா |
|  | இவர் அப்பாவின் தங்கை | அத்தை |
|  | இவர் அப்பாவின் தம்பி | சிற்றப்பா |
|  | இவர் அம்மாவின் அக்காள் | பெரியம்மா |




| | | |
|---|---|---|
|  | இவர் அம்மாவின் அண்ணன் | மாமா |
|  | இவர் அம்மாவின் தங்கை | சின்னம்மா/சித்தி |
|  | இவர் அம்மாவின் தம்பி | மாமா |
|  | இவர் அப்பாவின் அண்ணன் | பெரியப்பா |

I.7.2 - உறவுப் பெயர்களைச் சரியாகப் பயன்படுத்திப் பேசுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- சூழல் படத்தைப் பார்த்து உரையாடுதல்.
- உறவுப் பெயர்களை மாணவர்கள் கூறச் சொல்லி உரையாடுதல்.
- பாடப் பகுதியில் கூறப்பட்ட உறவுப் பெயர்களை வாசிக்கப் பணித்தல்.
- மாணவர்கள் தத்தம் உறவுகள் தொடர்பான விவரங்களை விரிவாக விளக்குதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 52,53

பாடம் 2

# சொற்குவியல்

## வாசித்து அறிக.




2.4.1 - சொல்லை வாசித்துப் புரிந்து கொள்வர்.

**ஆசிரியர் குறிப்பு**

- சூழலைப் பார்த்து உரையாடுதல்.
- சூழலில் காணும் சொற்களைச் சரியாக வாசிக்கப் பணித்தல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 54

பாடம் 3

# சுவைபட எழுதுவோம்

## வாசித்து எழுதுக.



நான் **ஓவியம்** வரைந்தேன்.



சிறுவர்கள் **கோலிக்குண்டு** விளையாடினார்கள்.



நாய் **பூனையைத்** துரத்துகிறது.



அம்மா பூக்கூடையுடன் **கோவிலுக்குச்** செல்கிறார்.



பறவைகள் **வானில்** பறக்கின்றன.



ஆற்றைக் கடக்கப் **பாலத்தில்** ஏறிச் செல்ல வேண்டும்.

3.4.1 - சொல்லைக் கொண்டு வாக்கியம் அமைப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- பாடப் பகுதியில் உள்ள சூழலைப் பற்றி உரையாடுதல்.
- சொற்களுக்கு ஏற்ற வாக்கியங்களைப் பிழையற வாசித்து எழுதுதல்.
- மேலும் சில சொற்களைக் கொண்டு மாணவர்கள் சுயமாக வாக்கியங்கள் அமைத்தல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 55,56

பாடம் 4

# செய்யுளும் மொழியணியும்

## இணைமொழிகளை அறிக.

மழைக் காலம் துவங்குவதற்கு முன் எறும்புகள் சுறுசுறுப்பாக **அங்கும் இங்குமாகச்** சென்று உணவுகளைச் சேகரித்தன.

வெட்டுக் கிளிகளோ உணவைச் சேகரிக்காமல் **ஆடல் பாடல்** என்று ஆட்டம் போட்டுக் கொண்டு இருந்தன.

மழையும் வந்தது. எறும்புகள் சுறுசுறுப்பாகச் சேர்த்த தானியங்களை உண்டு மகிழ்ந்தன.



வெட்டுக் கிளிகளுக்கோ உணவு இல்லை. மழை தொடர்ந்து பெய்தது. பல நாள்கள் உணவு உண்ணாததால் வெட்டுக் கிளிகள் **எலும்பும் தோலுமாகக்** காட்சியளித்தன.

எறும்புகள் பரிதாபப்பட்டன. அவை சேர்த்த உணவில் பாதியை வெட்டுக் கிளிகளுக்குக் கொடுத்தன. வெட்டுக் கிளிகள் தங்கள் தவற்றை உணர்ந்து நன்றி கூறின.




## இணைமொழியும் பொருளும்

- **அங்கும் இங்கும்** - சில இடங்களில்
- **ஆடல் பாடல்** - பாட்டும் நடனமும் /பாட்டும் கூத்தும்
- **எலும்பும் தோலும்** - மிகவும் மெலிந்து /எலும்பு தெரியும்படியாக

4.4.1 - ஒன்றாம் ஆண்டுக்கான இணைமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- கதையை வாசித்து அறிதல்.
- இணைமொழிகளையும் பொருளையும் எழுதுதல்.
- இணைமொழிகளுக்கு ஏற்ற சூழலை உருவாக்குதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 57

பாடம் 5

# இலக்கணம்

## வாசித்து அறிக.

பால் என்பது பகுப்பு அல்லது பிரிவு எனப்படும். பொருள்களை (உயர்திணை, அஃறிணை) ஐவகைப் பால்களாகப் பிரிக்கலாம். அவை:




5.3.2 - ஆண்பால், பெண்பால், பலர்பால் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- சொற்களைப் பிழையற வாசித்தல்.
- ஆண்பால், பெண்பால், பலர்பால் என வகைப்படுத்திச் சொற்களை வாசித்தல்.
- கொடுக்கப்பட்ட சொற்களை மாணவர்கள் பொருத்தமான வரிபடங்களில் எழுதுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 58

# தொகுதி 23

## பாடம் 1 அறுசுவை

### கேட்டு உரையாடுக.



அறுசுவை என்பது என்னம்மா?
அதை நீ எனக்குச் சொல்லம்மா?



**கருப்பஞ் சாறு** அருந்திடுவாய்,
அதன் சுவையோ **இனிப்பாகும்**.



உணவில் **பாகற்காய்** சேர்த்திடுவாய்,
இதன் சுவைதான் **கசப்பாகும்**.



**உப்பை** உணவில் கலந்திடுவாய்,
உப்பின் சுவைதான் **கரிப்பாகும்**.



பிஞ்சுக் **கொய்யா** தின்றிடுவாய்!
இக்காயின் சுவையோ **துவர்ப்பாகும்**.



**மிளகாய்** கடித்ததும் அலறிடுவாய்,
காரணம் இதன்சுவை **உறைப்பாகும்**!



**புளியம்**பழத்தைக் கடித்திடுவாய்!
இப்பழச்சுவையோ **புளிப்பாகும்**!



அறுவகைச் சுவைகளை அறிந்திடுவாய்.
இவை உணவில் கலந்தால் நலமாகும்.

1.7.3 - அறுசுவைப் பெயர்களைச் சரியாகப் பயன்படுத்திப் பேசுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- அறுசுவைகளைப் பற்றிய வாக்கியங்களை வாசிக்கப் பணித்தல்.
- அறுசுவைகளையும் அவற்றிற்கேற்ற உணவுகளைப் பற்றிப் பேசுதல்.
- மாணவர்கள் திரட்டேடு தயாரிக்க ஆசிரியர் துணைபுரிதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 59

பாடம் 2

# இனிய சொற்றொடர்

## வாசித்து அறிக.




2.4.2 - சொற்றொடரை வாசித்துப் புரிந்து கொள்வர்.

**ஆசிரியர் குறிப்பு**

- பாடப் பகுதியில் உள்ள சொற்றொடர்களை வாசித்தல்.
- சொற்றொடர்களின் பொருள் விளங்க மாணவர்கள் விளக்கமாகக் கூறுதல்.
- சொற்றொடர்களைக் கொண்டு வாக்கியங்கள் அமைத்து வாசித்தல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 60



# பாடம் 3 வாக்கியம் அமைப்போம்

## வாசித்து எழுதுக.




நான் என் அம்மாவுக்கு அன்னையர் நாளை முன்னிட்டு **வாழ்த்து அட்டை** செய்தேன்.



சிறுமிகள் கடற்கரையில் **மணல் வீடு** கட்டிச் சிரித்து மகிழ்ந்தனர்.



அக்காள் **வெள்ளி மோதிரம்** அணிந்து அழகு பார்த்தாள்.



அம்மா **கடல் நண்டு** வாங்கி சுவையாகச் சமைத்தார்.



செல்வந்தர் பணத்தை **இரும்புப் பெட்டியில்** பூட்டி வைத்தார்.



நாங்கள் அப்பாவுக்குப் பிறந்தநாள் **வாழ்த்துப் பாடலைப்** பாடினோம்.



மாலாவின் வீட்டிற்கு அருகில் **நீச்சல் குளம்** ஒன்று உள்ளது.

3.4.2 - சொற்றொடரைக் கொண்டு வாக்கியம் அமைப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**
- பாடப் பகுதியில் உள்ள வாக்கியங்களை வாசித்தல்.
- வாக்கியங்களில் உள்ள சொற்றொடர்களைப் பிழையற வாசித்தல்.
- சொற்றொடர்களுக்கு ஏற்ப சொந்த நடையில் மாணவர்கள் வாக்கியம் அமைத்தல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 61

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## மரபுத்தொடரின் பொருளை அறிக.



கந்தனும் பாரதியும் பள்ளி முடிந்து வீடு திரும்பினர். இருவரும் சாலை ஓரமாக நடந்து சென்றனர்.

சற்றுத் தொலைவில் ஒரு முதியவர் அமர்ந்திருந்தார். அவரின் காலில் இரத்தம் வழிந்தது. இரு இளைஞர்கள் காரசாரமாக உரையாடிக் கொண்டிருந்தனர். அவர்களின் பேச்சு வரம்பு மீறிப் போனது. இரு இளைஞர்களில் ஒருவர் முதியவரின் மகன் எனத் தெரிந்தது.

எதிர்பாராமல் நடந்த விபத்திற்கு யாரையும் குற்றம் கூற வேண்டாம் என்று சிலர் கூறினர். இம்மாதிரியான நேரத்தில் மரியாதை குறைவாகப் பேசி **நாக்கு நீளுதல்** கூடாது என்றும் சிலர் அறிவுரை கூறினர்.

சற்று நேரத்தில் காவல் அதிகாரிகள் அவ்விடத்திற்கு வந்தனர். அங்கிருந்த அனைவரும் அவ்விடத்தை விட்டு அகன்றனர்.

### மரபுத்தொடரும் பொருளும்

- **நாக்கு நீளுதல்.**
  வரம்பு மீறிப் பேசுதல்/மரியாதை குறைவாகப் பேசுதல்

4.6.1 - ஒன்றாம் ஆண்டுக்கான மரபுத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து கூறுவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- கதையை வாசித்து அறிதல்.
- மரபுத் தொடரையும் பொருளையும் அறிந்து கூறுதல்.
- மரபுத் தொடருக்கு ஏற்ப வேறு சூழல் அல்லது கதையை உருவாக்கிக் கூறுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 62

பாடம் 5

# இலக்கணம்

## செய்தி வாக்கியங்களை அறிக.



1. எங்கள் பள்ளியில் காய்கறித் தோட்டம் உள்ளது.
2. நாங்கள் அப்பாவின் பிறந்த நாளைக் கொண்டாடினோம்.



3. வீட்டில் அனைவரும் நலமாக உள்ளனர்.
4. மாணவர்கள் மேடையில் சிறப்பாக நடனம் ஆடினர்.
5. புலி பூனை இனத்தைச் சேர்ந்தது.
6. காட்டுப் பன்றி வன அதிகாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டது.
7. தமிழ் ஆசிரியர் நேற்று பள்ளிக்கு வரவில்லை.



8. என் தந்தை நேற்று வந்தார்.
9. ஆதவன் சுயமாகத் தன் வேலைகளைச் செய்வான்.
10. நான் வீட்டுப் பாடத்தை முறையாகச் செய்கிறேன்.



11. நாளை என் மாமா இங்கு வருகின்றார்.
12. பள்ளி விடுமுறையில் சுற்றுலா சென்றோம்.

5.4.3 - செய்தி வாக்கியத்தை அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாக்கியங்களைப் பிழையற வாசித்து அறிதல்.
- வாக்கியங்களில் உள்ள செய்தி வாக்கியங்களைக் கூறுதல்.
- மாணவர்கள் செய்தி வாக்கியங்களை எழுதிப் பட்டியலிடுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 63

தொகுதி 24

பாடம் 1

# நன்றி போற்றுவோம்

## படத்தைப் பார்த்து கதைக் கூறுக.



| | | |
|---|---|---|
| 1 தேனீ | 2 ஆற்றில் | 3 விழுந்து |
| 4 நீச்சல் | 5 புறா | 6 இலை |
| 7 மேலே | 8 சிறுவன் | 9 கல் |
| 10 கொட்டியது | 11 குறி தவறியது | 12 தப்பித்தது |

1.8.1 - தனிப்படத்தைத் துணையாகக் கொண்டு கதை கூறுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- படத்தைப் பார்த்து மாணவர்கள் குழு முறையில் உரையாடுதல்.
- கொடுக்கப்பட்ட சொற்களைத் துணையாகக் கொண்டு கதையைக் கூறுதல்.
- குழு முறையில் மாணவர்கள் உரையாடிய பின்னர் முழுக் கதையைக் கூறப் பணித்தல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 64

பாடம் 2

# அப்பாவின் பரிசு

## வாசித்து அறிக.

அப்பா அவசர அவசரமாக வீட்டினுள் நுழைந்தார். அவரின் முகம் கடுகடுவென இருந்ததால் நாங்கள் அனைவரும் அமைதியாக இருந்தோம்.

விரைவாக உடையை மாற்றிக் கொண்டு மீண்டும் வெளியில் சென்றார். அம்மாவுக்கும் ஒரே பதற்றம். இப்படி என்றுமே நடந்ததில்லையே என்று அம்மா தனக்குள் பேசிக் கொண்டார்.

அண்ணனும் தங்கையும் வரவேற்பறையில் அமர்ந்து அப்பாவின் செய்கையைப் பற்றி எதையோ முணுமுணுத்தனர். அம்மாவின் சோகமான முகத்தைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.



சற்று நேரத்தில் அப்பா மீண்டும் வீடு திரும்பினார். "மீரா, மீரா," என அம்மாவை அழைத்தார்.

"இதோ வந்துவிட்டேன்," என்று பதில் கூறிக் கொண்டு அம்மா அறையில் இருந்து விரைந்து வந்தார்.

அப்பா தன் கையில் இருந்த பரிசுப் பொட்டலத்தை அம்மாவிடம் நீட்டினார். "பிறந்தநாள் வாழ்த்துகள் மீரா," என்று அன்பான குரலில் வாழ்த்தைத் தெரிவித்தார்.

முகம் மலர புன்னகைத்தவாறே அம்மா பரிசைப் பெற்றுக் கொண்டு நன்றி கூறினார்.

2.2.14 - பத்தியைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- கதையை மௌனமாக வாசித்தல்.
- சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் கதையை வாசித்தல்.
- வாய்மொழியாகக் கேள்விகள் கேட்டு உரையாடுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 65

பாடம் 3

# தேசிய கீதம்

## வாசித்து எழுதுக.



1. வாழை மரம் **செழிப்பாக வளர்ந்தது**.
2. எங்கள் வகுப்பறை **இரண்டாவது மாடியில்** உள்ளது.
3. மாணவர்கள் **நேராக நின்று** தேசிய கீதம் பாடினர்.



4. தாத்தா **உறுதியான கைத்தடியை** ஊன்றி நடந்தார்.
5. **அழகான மயிலைக்** கண்டு மயங்கி நின்றேன்.
6. **இனிப்பான மாம்பழத்தைச்** சுவைத்து உண்டோம்.



7. **வளைவான சாலையில்** வாகனங்கள் மெதுவாகச் சென்றன.
8. சுறா மீன்கள் **கூர்மையான பற்களைக்** கொண்டவை.



9. அம்மா **மணமுள்ள பூக்களைப்** பறித்து மாலையாகத் தொடுத்தார்.
10. தலைநகரில் **உயரமான கோபுரங்களைக்** கண்டு வியந்தோம்.

3.4.2 - சொற்றொடரைக் கொண்டு வாக்கியம் அமைப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாக்கியங்களைப் பிழையற வாசித்தல்.
- வாக்கியங்களில் உள்ள சொற்றொடர்களைப் பிழையற வாசித்து எழுதுதல்.
- மேலும் சில சொற்றொடர்களை வரிசைப்படுத்தி வாக்கியங்கள் அமைத்தல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 66

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## பழமொழியை அறிக.

அம்மா : ஏன் உன் முகம் வாட்டமாக இருக்கிறது குமுதினி?

குமுதினி : ஒன்றும் இல்லை அம்மா. நான் நன்றாகத்தான் இருக்கிறேன்.

அம்மா : இல்லை, இல்லை. நீ எதையோ மறைக்கிறாய். **அகத்தின் அழகு முகத்தில் தெரியும்** என்பதை நான் அறிவேன்.

குமுதினி : மனது சரியில்லை அம்மா. இன்று பள்ளியில் வகுப்பாசிரியர் என்னைக் கண்டித்தார் அம்மா.

அம்மா : ஏன் அப்படிச் செய்தார்? ஏதாவது காரணம் இருக்க வேண்டுமே!



குமுதினி : நான் ஆசிரியர் கொடுத்த வீட்டுப் பாடங்களை முறையாகச் செய்யவில்லை அம்மா, அதனால்தான்.

அம்மா : தவறு உன்னுடையதுதான். இனிமேல் அப்படிச் செய்யாதே. ஆசிரியர் கொடுக்கும் வீட்டுப் பாடங்களைக் குறிப்புப் புத்தகத்தில் எழுதிக் கொள்வது சிறப்பு.

குமுதினி : இனிமேல் அப்படியே செய்கிறேன் அம்மா.

### பழமொழியும் பொருளும்

- **அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.**
  ஒருவருடைய மன உணர்வை அவர் வாய்விட்டுச் சொல்லாவிட்டாலும் முகம் காட்டிவிடும்.

4.7.1 - ஒன்றாம் ஆண்டுக்கான பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து கூறுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- உரையாடலைப் பாகமேற்று வாசித்தல்.
- பழமொழியையும் பொருளையும் விளக்கி உரையாடுதல்.
- பழமொழிக்கு ஏற்ற வேறு ஒரு சூழலை அல்லது கதையை உருவாக்குதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 67,68

பாடம் 5

# இலக்கணம்

## பால் வகைச் சொற்களை வாசித்து அறிக.




1. பெற்றோர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.
2. இளைஞர்கள் கூட்டுப் பணியில் ஈடுபட்டனர்.
3. அக்காள் பேரங்காடிக்குச் சென்றாள்.
4. ஆசிரியர் அறிவியல் பாடம் போதித்தார்.
5. குமரன் தன் தந்தைக்கு உதவி செய்தான்.
6. பக்தர்கள் காவடி ஏந்திச் சென்றனர்.
7. கலையரசியும் கயல்விழியும் வீட்டுப் பாடங்களைச் செய்தனர்.




5.3.2 - ஆண்பால், பெண்பால், பலர்பால் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**
• பாடப் பகுதியில் கொடுக்கப்பட்ட சொற்களையும் வாக்கியங்களையும் வாசித்தல்.
• ஆண்பால், பெண்பால், பலர்பால் ஆகியவற்றை அறிந்து கூறுதல்.
• பொருத்தமான வரிபடத்தில் சொற்களை எழுதிப் பட்டியலிடுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 69



அப்பா சந்தைக்குச் சென்றார்.
அம்மா காய்கறிகள் வாங்கினார்.
பெற்றோர் அறிவுரை கூறினர்.

சிறுமி நடனம் ஆடினாள்.
சிறுவன் கைகளைத் தட்டினான்.
சிறுவர்கள் சிரித்து மகிழ்ந்தனர்.

பேரன் ஓவியம் வரைந்தான்.
பேர்த்தி தண்ணீர் பருகினாள்.
பேரப்பிள்ளைகள் வீட்டிற்கு வந்தனர்.

தோழன் கேள்விகள் கேட்டான்.
தோழி விடை கூறினாள்.
தோழர்கள் வேடிக்கைப் பார்த்தனர்.

வான்மதி நூலகம் சென்றாள்.
முகிலன் வரிசையில் நின்றான்.
ஆசிரியர்கள் பாடங்களைக் கற்பித்தனர்.

5.3.2 - ஆண்பால், பெண்பால், பலர்பால் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- வாசிப்புப் பகுதியை வாசிக்கப் பணித்தல்.
- வாக்கியங்களில் உள்ள ஆண்பால், பெண்பால், பலர்பால் சொற்களைக் கண்டறிந்து வாசித்தல்.
- வேறு ஆண்பால், பெண்பால், பலர்பால் சொற்களைப் பட்டியலிடுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 70

# தொகுதி 25

## பாடம் 1 செயல்படுக

### வாசித்துச் செயல்படு.





- காலையில் எழு.
- சுத்தமாகக் குளி.
- காலை உணவு உண்.
- பள்ளிக்குச் செல்.
- பாடம் படி.






- நிமிர்ந்து நில்.
- உயரம் தாண்டு.
- வேகமாய் ஓடு.
- சொல்வதைக் கேள்.





- இடப்பக்கம் பார்த்துச் செல்க.
- தூரத்தில் நில்.
- விதிமுறைகளைப் பின்பற்றுக.
- வலப்பக்கம் பார்த்துச் செல்க.
- மேம்பாலத்தைப் பயன்படுத்துக.

1.3.1 - செவிமடுத்த கட்டளையையும் வேண்டுகோளையும் நிறைவேற்றுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாக்கியங்களைச் சரியான தொனியுடன் வாசித்திடுக.
- கட்டளை வாக்கியங்களையும் வேண்டுகோளையும் நிறைவேற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- வாக்கியங்களைக் கூறி அதற்கேற்ப துலங்கச் செய்தல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 71

பாடம் 2

# இனிய நினைவுகள்

## வாசித்து அறிக.




- பள்ளிப் பரிசளிப்பு விழா.
- மாணவர்கள் அரங்கத்தில் அமர்ந்தனர்.
- தலைமையாசிரியர் சிறப்புரை ஆற்றினார்.
- மாணவர்கள் நடனம் ஆடினர்.
- மாணவிகள் இசைக்கருவிகள் இசைத்தனர்.
- அக்காள் பரிசு பெற்றாள்.
- அண்ணன் பரிசு பெற்றார்.
- பெற்றோர் கண்டு மகிழ்ந்தனர்.
- அதிகாரி அனைவரையும் பாராட்டினார்.
- பள்ளி கோலாகலமாக இருந்தது.




- எங்கள் குடும்பம் மகிழ்ச்சியானது.
- நாங்கள் சுற்றுலா சென்றோம்.
- மகிழுந்தில் பிரயாணம் செய்தோம்.
- இயற்கை அழகை ரசித்தோம்.
- அப்பா உணவு சமைத்தார்.
- அம்மா உதவி செய்தார்.
- கடற்கரையில் விளையாடி மகிழ்ந்தோம்.
- தாத்தா விடுகதை கூறினார்.
- அக்காள் நீச்சல் அடித்தாள்.
- தம்பி பனிக்கூழ் கேட்டான்.
- அண்ணன் வாங்கிக் கொடுத்தார்.
- களைப்புடன் வீடு திரும்பினோம்.



2.2.13 - மூன்று சொற்கள் கொண்ட வாக்கியங்களைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- சூழலுக்கு ஏற்ப அமைக்கப்பட்ட வாக்கியங்களைப் பிழையற வாசிக்கப் பணித்தல்.
- வாக்கியங்களைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசித்தல்.
- வாக்கியங்களைச் சொல்வதெழுதுதலாக எழுதுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் :

பாடம் 3

# வாக்கியம் எழுதுவோம்

## வாசித்து எழுதுக.

1



வளையல்

- அம்மா **வளையல்** அணிவார்.
- அம்மா தங்க **வளையல்களை** விரும்பி அணிவார்.

2



பிராணிகள்

- சில **பிராணிகள்** காட்டில் வாழும்.
- **பிராணிகளில்** பெரிய உருவம் கொண்டது யானை.

3



வானவில்

- வானில் **வானவில்** தோன்றியது.
- **வானவில்லில்** ஏழு நிறங்களைக் கண்டேன்.

4



ஆசிரியர்

- **ஆசிரியர்** மாணவர்களை அருகில் வரும்படி அழைத்தார்.
- **ஆசிரியரின்** தகவல்களை மாணவர்கள் கேட்டனர்.

5



கொந்தளிப்பு

- கடலில் **கொந்தளிப்பு** ஏற்பட்டது.
- கடல் **கொந்தளிப்பால்** பேரலைகள் தோன்றின.

6



பள்ளி

- என் **பள்ளி** அழகாக இருக்கும்.
- **பள்ளிக்கு** அருகில் ஒரு பழக்கடை இருக்கிறது.

7



மண்டபம்

- பள்ளி **மண்டபம்** பெரியது.
- பெற்றோர்கள் **மண்டபத்தில்** அமர்ந்தனர்.

8



வீணை

- இளமாறன் சிறப்பாக **வீணை** மீட்டினான்.
- **வீணையின்** இசை கேட்க இனிமையாக இருந்தது.

௯



மாலை

- நேற்று **மாலை** வானம் கருத்தது.
- நேற்று **மாலையில்** கனத்த மழை பெய்தது.

3.4.1 - சொல்லைக் கொண்டு வாக்கியம் அமைப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாக்கியங்களைப் பிழையற வாசித்தல்.
- வாக்கியங்களைப் பிழையற எழுதுதல்.
- மேலும் சில சொற்களுக்குப் பொருத்தமான வாக்கியங்களை எழுதுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 74,75

பாடம் 4

# செய்யுளும் மொழியணியும்

## கொன்றை வேந்தனையும் பொருளையும் அறிக.




### கொன்றை வேந்தனும் பொருளும்

- **ஐயம் புகினும் செய்வன செய்.**
  பிச்சையெடுக்கும் அளவுக்கு வறுமை ஏற்பட்டாலும் செய்ய வேண்டிய நற்செயல்களைச் செய்ய வேண்டும்.

4.2.1 - ஒன்றாம் ஆண்டுக்கான கொன்றை வேந்தனையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- பத்தியைப் பிழையற வாசித்தல்.
- கொன்றை வேந்தனையும் பொருளையும் அறிந்து கூறுதல்.
- கொன்றை வேந்தனையும் பொருளையும் மனனம் செய்து எழுதுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 76

பாடம் 5

# இலக்கணம்

## வாக்கிய வகை அறிக.

### கட்டளை வாக்கியங்கள்

- கதவைத் திற.
- மூடி வை.
- எழுதிக் கொடு.
- பல் துலக்கு.
- சுத்தத்தைப் பேண்.
- மரியாதை செலுத்து.
- மெதுவாகப் பேசு.
- கைகளை உயர்த்து.
- நிமிர்ந்து நில்.
- பூட்டைப் பூட்டு.
- வாசலில் நிற்காதே.
- வரிசையில் நில்.
- உரக்கப் பேசு.

### வேண்டுகோள் வாக்கியங்கள்

- தயவுசெய்து விலகி நில்லுங்கள்.
- தயவுசெய்து உன் அண்ணனிடம் கொடு.
- எனக்கு அந்நூலைத் தருக.
- எங்கள் இல்லத்திற்கு வருக.
- சற்று விளக்கமாகக் கூறுக.
- தயவுசெய்து அனுமதி தருக.
- பயன்படுத்திய நூல்களை நன்கொடையாகத் தருக.
- தயவுசெய்து அம்மாவை அழைத்திடுக.

**உயர்நிலைச் சிந்தனை**

வாக்கிய வகையைப் பொருத்தமான வரிபடத்தில் எழுதிக் காட்டுக.

5.4.1 - கட்டளை வாக்கியத்தை அறிந்து கூறுவர்; எழுதுவர்.
5.4.2 - வேண்டுகோள் வாக்கியத்தை அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாக்கியங்களைப் பிழையற வாசித்தல்.
- வாக்கியங்களைப் பொருத்தமான வரிபடத்தில் எழுதி வகைப்படுத்திக் கூறுதல்.
- வாக்கியங்களைப் பிழையற எழுதிப் பட்டியலிடுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 77




# பயனை அறிவோம்

## பாடி மகிழ்க.

### அறிவும் பயனும்!



இரும்புத் துண்டு கிடந்தது
எடுத்து வீசி எறிந்தனர்!
கருமான் ஒருவன் கண்டனன்
காய்ச்சிக் கத்தி செய்தனன்!

எலும்புத் துண்டு கிடந்தது
எடுத் தெறிந்து சென்றனர்!
எலும்புக் காரன் கண்டனன்
எடுத்துப் பிடிகள் செய்தனன்!

தகரம் ஒன்று கிடந்தது
தூக்கி வீசி எறிந்தனர்!
தகரக் காரன் கண்டனன்
தகரக் குவளை செய்தனன்!

துரும்பும் நமக்குப் பயன்படும்
தோன்றும் பொருள்கள் யாவுமே!
அறிவுள் ளார்க்குப் பயன்படும்
அறிவில் லார்க்குப் பயனில்லை!

*- பாவலேறு பெருஞ்சித்திரனார்*

1.4.1 - செவிமடுத்த பாடலிலுள்ள முக்கியக் கருத்துகளைக் கூறுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- பாடலைத் தக்க தொனியுடனும் நயத்துடனும் பாடுதல்.
- பாடலில் உள்ள கருத்துகளைக் கலந்துரையாடுதல்.
- பாடலைக் குழு முறையில் பாடிக் காட்டுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 78

பாடம் 2

# அணிலும் அழகு

## நயமுடன் வாசித்திடுக.

எட்டில் பாதி நான்காகும்
எல்லா உயிரும் சமமாகும்!

நான்கில் பாதி இரண்டாகும்
நமது கண்கள் இரண்டாகும்!

இரண்டில் பாதி ஒன்றாகும்
அன்பு வழியே நன்றாகும்!

ஒன்றில் பாதி அரையாகும்
உடலுக்கு ஆடை திரையாகும்!

அரையில் பாதி காலாகும்
அணிலுக்கு அழகு வாலாகும்!

\- குழந்தைப் பாடல்கள்




2.3.1 - சிறுவர் பாடலைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு, நயம் ஆகியவற்றுடன் வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- பாடலைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு, நயம் ஆகியவற்றுடன் வாசிக்கப் பணித்தல்.
- குழு முறையில் நயத்துடன் பாடுதல்.
- பாடல் வரிகளை அழகான கையெழுத்தில் எழுதுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 79,80

பாடம் 3

# சொல்லும் வாக்கியமும்

## சரியாக வாசித்திடுக.

1

கொடி ஏற்றும்போது
தேசிய கீதம் பாடுவோம்.

2

திராட்சை குலைகுலையாகக்
காய்க்கும்.

3

எனக்கு வீணையின்
இசை மிகவும் பிடிக்கும்.

4

யானையின் காது முறம்
போல் இருக்கும்.

5

முதலை நீரில் வாழும்
கொடிய பிராணி.

6

அத்தை காய்கறிகள்
வாங்கினார்.

3.4.1 - சொல்லைக் கொண்டு வாக்கியம் அமைப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**
- சொல்லைக் கொண்டு வாக்கியம் அமைத்தல்.
- வாக்கியங்களைப் பிழையற வாசித்தல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 81

7



மலாக்கா மாநிலத்தில் மாட்டு வண்டிகளைக் காணலாம்.

8



அம்மாவுக்குப் பூச்செடிகள் நடுவது மகிழியாகும்.

9



சுதந்திர தினத்தன்று பேரணிகள் நடத்தப்பட்டன.

10



மேடையில் பெண்கள் நளினமாக நடனம் ஆடினர்.

11



மாணவர்கள் திடலில் கபடி விளையாடினர்.

12



அம்மா தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்கிறார்.

3.4.1 - சொல்லைக் கொண்டு வாக்கியம் அமைப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- சொற்களுக்கு ஏற்ற வாக்கியங்களை வாசித்து அறிதல்.
- வாக்கியங்களைப் பிழையற வாசித்துக் காட்டுதல்.
- வாக்கியங்களை எழுதுதல். மேலும் சில சொற்களுக்குப் பிழையற வாக்கியங்களை எழுதப் பணித்தல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 81

# செய்யுளும் மொழியணியும்

## கொன்றை வேந்தனை அறிக.




## கொன்றை வேந்தனும் பொருளும்

- **குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை.**
  பிறரின் குறைகளையே பெரிதுபடுத்திக் கொண்டிருந்தால் உறவினர்களோ நண்பர்களோ யாரும் நம்மோடு இருக்க மாட்டார்கள்.

4.2.1 - ஒன்றாம் ஆண்டுக்கான கொன்றை வேந்தனையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- உரையாடலைப் பிழையற வாசித்தல்.
- உரையாடலைப் பாகமேற்று நடித்தல்.
- கொன்றை வேந்தனையும் பொருளையும் வாசித்து மனனம் செய்து எழுதுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 82

பாடம் 5

# இலக்கணம்

## உயர்திணை அஃறிணை அறிக.




உயர்திணை : மனிதர், தேவர் போன்ற பகுத்தறிவு உள்ளவர்களைக் குறிப்பது.

அஃறிணை : உயர்திணை அல்லாத பிற உயிரினங்களையும் உயிரற்ற பொருள்களையும் குறிப்பது.

5.3.1 - உயர்திணை, அஃறிணை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- உயர்திணை, அஃறிணைச் சொற்களைப் பிழையற வாசித்தல்.
- உயர்திணை, அஃறிணைச் சொற்களைப் பட்டியலிடுதல்.
- உயர்திணை, அஃறிணைச் சொற்களைப் பொருத்தமான வரிபடத்தில் நிரப்புதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 83,84